*
Registered as a News paper in Ceylo.. விலை சதம் 10



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [15-2-67] இதழ் 5
பரபவ மாசி 3 ஜு ...4 புதன்கிழமை



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# நிர்வாகச்சீர்குலைவு ஏற்படுத்த சதியா?

## அரசாங்கத்துக்கு இரகசிய பொலிஸார் தகவல்

கொழும்பு, செவ்.

அரசாங்க நிர்வாகத்தில்சீர்குலைவு ஏற்படுத்துவதற்கு அரசாங்க ஊழியர்கள்சிலரைப் பயன்படுத்துவதற்கான திட்டமொன்றை அரசியல்கட்சிகள் சிலவற்றைச்சேர்ந்த சிலதலைவர்கள்திட்டமிட்டிருப்பதாக அரசாங்கத்துக்கு இரகசியப் பொலிஸ் தகவல் கொடுத்துள்ளதாம்.

இரகசியப் பொலிஸ்விசேஷ பிரிவு தெரிவித்துள்ள இத் தகவலின்படி முன்னைய கூட்டரசாங்க ஆதரவாளரான அரசாங்க ஊழியர்களையும் அவர்களது சங்கங்களையும் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாம்.

இத்திட்டத்தின்படி அரசாங்க ஊழியர்கள் மத்தியில் ஆங்கிலத்தில் அலுவல்கள் செய்யாமல் பகிஷ்கரிப்பு இயக்கம் ஆரம்பிப்பதற்கும், கூட்டரசாங்கஆதரவு அரசாங்க ஊழியர்களைக் கொண்ட பட்டியல் ஒன்றைத் தயாரிப்பதற்கும், அரசாங்கசேவையில் உற்சாகத்தைக் குறைப்பதற்கும், அரசாங்க இலாகாக்களில் அன்றாடவேலைகளில் தாமதமேற்படுத்துவதற்கும் யோசனை செய்யப்பட்டுள்ளதாம். இந்தத் திட்டத்தின் மூலம் அரசாங்க நிர்வாகத்தில் சீர்குலைவு ஏற்படுத்தலாமென அவர்கள் கருதுகின்றனராம்.

அரசாங்கப் பார்லிமெண்டரிக் குழுவின் கூட்டம் அடுத்தமுறை நடைபெறும்பொழுது இச்சதித்திட்டம் பற்றி ஆராய்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென அரசாங்கத்தை அங்கத்தவர்பலர் கேட்கவிருக்கின்றனராம்.

வடபகுதியில்

## ரோந்துவேலையில் யுத்தக்கப்பல்

### சட்டவிரோத கடத்தல், குடியேற்றத்தைக் கண்காணிக்கிறது

மாவிட்டபுரம், செவ்.

இலங்கைக் கடற்படையினரின் யுத்தக்கப்பலான 'கஜபாகு' கடந்தசிலதினங்களாக வடபகுதிக் கடலில் ரோந்துசுற்றி வருகிறது. இக்கப்பல் சட்டவிரோதக் கடத்தலையும், சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடைசெய்வதற்காக இப்பகுதிகளில் ரோந்துசுற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்ற இரண்டு மூன்று வருடங்களின் பின்னர் கடற்படைக்கப்பலொன்று வடபகுதிக் கடலில் ரோந்து சுற்றுவது இதுதான் முதல்தடவையாகும்.

நேற்று முன்தினம் 'கஜபாகு' ரோந்துசுற்றிவருகையில் பருத்தித்துறை ஆழ் கடலில் ஓர் இயந்திரப் படகு ஐவருடன் வேகமாகச் செல்வதைக் கண்டார்கள். இப்படகின்மீது சந்தேகம் கொண்ட கடற்படையினர் அப்படகையும் அதிலிருந்தவர்களையும் கைதுசெய்து வடபகுதி சுங்க கலக்டர் திரு. பத்திரானு விமலதர்மா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இதுசம்பந்தமாக விசாரணை செய்த சுங்கக் கலக்டர் படகின் தண்டேலுக்கு 'கிளியரன்ஸ்' இல்லாமல் கடலில் சென்றதற்காகவும் முன்னர் இருதடவைகள்சுங்கப்பகுதியினரால் தண்டிக்கப்பட்டவ ரென்பதற்காகவும் 300ரூபா அபராதம் செலுத்தும்படி கட்டளையிட்டார்.

படகிலிருந்த மற்றநால்வரும் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டார்கள். சுமார் 25,000ரூபா பெறுமதியான படகு அதன் உண்மையான சொந்தக்காரர்வந்து உரிமை கோரும்வரை சுங்கப்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

## புலோலி துணிகர திருட்டு: நாலவர் கைது

### ரூ. 9,000 மீட்கப்பட்டது

உடுப்பிட்டி, வெள்ளி

விநாயக முதலியார்வீதியில் பட்டப்பகலில் வீடு உடைத்து நடைபெற்ற துணிகரத் திருட்டு மர்மம் இப்பொழுது துலக்கப்பட்டுவிட்டதாகத் தெரிய வருகிறது. இம்மாதம் 6-ந்திகதி புலோலி, விநாயக முதலியார் வீதியிலிருக்கும் கணபதிப்பிள்ளை என்பவரதுவீட்டில் நகைகள், ரொக்கப் பணம் உட்பட ரூ. 14400 பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போய்விட்டதாக பருத்தித்துறைப் பொலிஸில் செய்யப்பட்ட புகாரை தொடர்ந்துமேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணையின்பின்னர் சந்தேகத்தின் மீது நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸ் சார்ஜண்ட் திரு. கே. அரிநேசரத்தினமும், பருத்தித்துறைப் பொலிஸ் சுற்றுப் பிரிவைச் சேர்ந்த திரு. சரவணமுத்து உட்பட சில பொலிஸ் கான்ஸ்டபிள்களைக் கொண்ட கோஷ்டியொன்றும் நேற்றுப்பகல் சின்னன் செல்லன், சின்னன் சின்னையா, ஆழ்வான் செல்லன், இளையவன் சேகரன் ஆகிய நால்வரையும் பளை, முல்லைத்தீவு, பருத்தித்துறைஆகிய இடங்களில் வைத்துச் சந்தேகத்தின் மீது கைது செய்தது. இதுவரையில் சுமார் 6000 ரூபா ரொக்கப்பணமும் 3000 ரூபா பெறுமதியான நகைகளும் சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சந்தேக நபர்களின் வீடுகளைச் சோதனையிட்டதைத்தொடர்ந்து திருட்டுப் போன பொருட்களின் ஒரு பகுதி மீட்கப்பட்டதாம். இத் திருட்டு பருத்தித்துறையில் இதுவரையும் நடைபெற்றிராத திட்டமிட்டு நடைபெற்ற பெரும் திருட்டு என்று பொலிஸ் சார்ஜண்ட் கே. அரிநேசரத்தினம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

பொலிஸாரின் புலன்விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

## ரஷ்யா—பிரிட்டன் பொருளாதார உறவுகள் விஸ்தரிக்கப்படும்

லண்டன், பெப். 14

ரஷ்யப் பிரதமர் திரு. அலெக்ஸி கொஸிஜினுக்கும் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸனுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையின் விபரங்கள் இப்பொழுது வெளியாகியுள்ளன.

பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்குமிடையே பொருளாதார உறவுகளை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும் இரு நாடுகளுக்குமிடையே தொழில் நுட்ப, விஞ்ஞான ஒத்துழைப்பை ஏற்படுத்த வேண்டுமென்றும் விமானச் சேவைகளை விஸ்தரிக்க வேண்டுமென்றும் இரு தலைவர்களும் கோரியுள்ளனர்.

பொருளாதார உறவுகளை ... ர்க்க மந்திரிகள் திட்... தில் பேச்சு ... நடத்துவதற்கு இரு தலைவர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

19..-ம் ஆண்டு 1962-ம் ஆண்டு ஜெ... வா ஒப்பந்தங்களைப் பற்... நிற்பதாகத் தெரிவித்துள்ள இரு தலைவர்களும் வியட்னாம் நெருக்கடி சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் விரைவாகத் தீர்க்கப்பட வேண்டுமென்று கூறியுள்ளார்.

கிளிநொச்சி காணிப்பிரிவில்

## ஊழியர் பற்றாக்குறை: பொதுமக்கள் கஷ்டம்

கிளிநொச்சி, செவ்.

யாழ்ப்பாணம் செயலகத்தில் இயங்கிவந்த கரைச்சி-பூநகரி-துணுக்காய் பகுதிகளின் காணிப் பிரிவு கிளிநொச்சியில் இயங்கத் தொடங்கிய பொழுதிலும் ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாகப் பொதுமக்கள் தங்களது அலுவல்களைக் கவனிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இங்கு அதிகமாக வசிப்பவர்கள் குடியேற்றவாசிகள் தான். ஆனால் இவர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு மூன்று உத்தியோகத்தர்கள் மட்டுமே இக்காரியாலயத்தில் கடமையாற்றுகின்றனர் இந்நிலையில் பொதுமக்கள் நீண்டநேரம் காத்துநின்று சிரமப்பட வேண்டியிருக்கின்றது.

இங்கு வரும் பொதுமக்கள் இருப்பதற்கு ஆசனங்களின்றி நின்றபடி காத்து நிற்கின்றனர். இக்காரியாலயத்தில் சுமார் 10 உத்தியோகத்தர்கள் கவனிக்கக் கூடிய வேலைகள் தேங்கிக் கிடப்பதாகத் தெரிகின்றது.

## பழனிமலை வந்துசேர்ந்தார்

அளவெட்டி, திங்கள்

சென்னை இசைவிழாவில் பங்குபற்றிய தவில் வித்துவான் கைதடிப் பழனிமலை இலங்கைவந்து சேர்ந்தார்.

சென்னை அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்றவிசேஷ இசைவிழாவில்நாகசுரவித்துவான் குளிக்கரைப் பிச்சையப்பாபிள்ளையின் நாகசுரக் கச்சேரிக்கு தவில் வாசித்து இவர் பலரின் பாராட்டைப் பெற்றார்.

## இன்று

அகில இலங்கை சேக்கிழார் மன்றத்தின் ஆதரவில் இன்று மாலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் திரு. மு. கந்தையா 'அன்பர் ...' எனும் பொருள் பற்றி ஆய்வுரை நிகழ்த்துவார்.

## ... மண்டபம்

ஊர்காவற்றுறை, செவ்.

புங்குடுதீவுக் கிராமசபைக்கெனப் புதிதாக அமைத்த மண்டபத்தின் திறப்பு விழா அடுத்த மாதத்தில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

பெண் விற்பனையாளர்:

பெண் விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும். சம்பளம் ரூபா 10-00. விஞயகம் இன்டஸ்றீஸ், 39, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1536

ஆயுள்வேதவைத்தியர்

கொழும்பிலுள்ளவர்த்தக நிலையம் ஒன்றில் முழு நேரம் அல்லது பகுதி நேரம் வேலை செய்வதற்கு ஒரு ஆயுள் வேத வைத்தியர் தேவை. தராதரம்— கொழும்பு, ஆயுள்வேத கல்லூரியிடமிருந்தும் பிரசித்திபெற்ற கோயில்களிலிருந்தும் ஆயுள் வேத வைத்தியர் என்ற நற்சாட்சிப் பத்திரம். சம்பளம்—அரசாங்கவிகிதத்தின் படி. விளம்பரஇல. 1533, ஈழநாடு மே/பா என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1533

முகாமையாளர்:

நீர்வேலி வடக்கு இலக்குமி ஐக்கிய பண்டசாலைக்கு முகாமையாளர் தேவை. கூட்டுறவுப் பயிற்சியில் விசேட சித்தியும் கடை அனுபவமும் உடையவராய் இருத்தல் வேண்டும். இரண்டு நற்சாட்சிப்பத்திரத்துடன் வரவும். சம்பளம் 120/- காசுப்பிணை 1500 - ஆதனப்பிணை 2000/- விண்ணப்பமுடிவு திகதி 20-2-67. தலைவர், இ. செல்லத்துரை, ''அருள் அகம்'' நீர்வேலி வடக்கு. 1534

## விற்பனைக்கு

கோழிகள்:-

9 மாத BAB COCK (B 300) (OFF SHETNA FARM, GAM POLA). முட்டையிடும் கோழிகள் விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கலாம், அல்லது நேரில் பார்வையிடலாம். எஸ். ஐயாத்துரை, ''தவமணி வாச''. உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். 1539

திராட்சைக்கன்றுகள்

அனுப். இ-ஷா- கி ரூ. 2. சகுந்தலா. இஸ்கறயில் நீலம் ரூ. 3. யாழ்- முந்திரிகைசெய்கையாளர் சங்கம் கிளைக் காரியதரிசிஇ. கிருஷ்ணசாமி, திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணம். 1538

## கல்வி

மெக்கானிக் பாடங்கள்:

மோட்டார் டிரக்டர், டீசல் மெக்கானிக் பாடங்கள் நவீன முறையில் ஆறு [6] மாத காலத்தில் முழு நேரப் பயிற்சி அளிக்கப்படும். விபரங்கட்கு 20-2-67 க்கு முன் விண்ணப்பிக்கவும் அன்றி நேரில் தொடர்பு கொள்ளவும். INSTRUCTOR, ஸ்ரீ விக்னேஸ்வரா மோட்டார் ஸ்ரோஸ், 8/4, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1525


**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30. 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி- வைஜயந்திமாலா
**வஞ்சிக்கோட்டை வாலிபன்**
[புத்தம்புதிய கொப்பி]

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30 6-30, 9-45
போயாதினங்களில் 4 காட்சிகள்
**ஹபிலி ஹான்**
[ஹிந்தி]

**MANOHARA**
JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45
**The Devil-Ship Pirates**

**இப்பொழுது திரையிடப்படுகிறது!**

நவா
கொம்பனித்தெரு

கிங்ஸ்லி — கொழும்பு
பிளாஸா — வெள்ளவத்தை
வெலிங்டன் — யாழ்ப்பாணம்

விஜயா — மட்டக்களப்பு
ஸ்ரீ கிருஷ்ணு — திருமலை
விஜிதா — ஹட்டன்

அன்பு பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு டாக்டர்! கால் ஊனம் ஆனதால் தாழ்வு மனப்பான்மை கொண்டு தத்தளிக்கும் அவர் தங்கை!! அருமைக் கணவன்மீது சந்தேகங் கொண்ட அவர் மனைவி!! இவர்கள் மூவரின் கதை-

எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி, எஸ். வி. சுப்பையா
எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், மணிமாலா
முதலியோர் நடிக்கும்

**காக்கும் கரங்கள்**

5-வது வாரம்

கெப்பிட்டல் — கொழும்பு
மொடேர்ன் — பண்டாரவளை

எம். ஜி. ஆர்., ரத்னு,
கே. ஆர். விஜயா, நம்பியார், நாகேஷ்,
மனோரமா
மற்றும் பலர் நடிக்கும்

**தொழிலாளி**


பொலிஸ்நிலைய

# பூந்தோட்டங்களில் உப உணவுப்பயிர்செய்கை

யாழ்ப்பாணம், புதன்

நாட்டில் நிலவும் உப-உணவுப்பொருள் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யுமுகமாக சகல பொலிஸ் நிலையங்களிலுமுள்ள பூந்தோட்டங்களை அழித்துவிட்டு, அவ்வெற்றிடங்களில் உப-உணவுப் பயிர்களைப் பயிரிடுமாறு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அட்டிகலை நாடெங்கிலுமுள்ள சகல பொலிஸ்நிலையங்களுக்கும் சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதன் காரணமாக வடமாகாணத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் பூந்தோட்டங்கள் அளிக்கப்பட்டு வாழை, மரவள்ளி, குரக்கன் போன்ற உப-உணவுப் பயிர்களைப் பயிரிடுவதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள் [.ந.நி.[

# நைலோன்வலைபற்றுக்குறை, திருட்டுபற்றி ஆராயப்படும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப் பகுதிகளில் நிலவிவரும் நைலோன்வலைகளின் பற்றுக்குறை பற்றியும், அதனைக் கூட்டுறவுச்சங்கங்கள்மூலம் மீனவர்களுக்கு எவ்விதம் வழங்குவதென்பது பற்றியும், நைலோன் வலைகள் பற்றுக்குறையின் காரணத்தால் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்துவரும் சிறகுவலைகள் திருட்டுக்கள் குறித்தும் இம்மாதம் 18ந் தேதி யாழ்ப்பாண அரசாங்கச் செயலகத்தில் நடைபெறவிருக்கும் கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளையும், மீன்பிடி இலாகா ஊழியர்களையும்கொண்ட விசேஷ மகாநாட்டில் ஆராயப்படவிருக்கிறது.

வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெறவிருக்கும் இம் மகாநாட்டில் தலைமைக் காரியாலயக் காரியாதிகாரி திரு. ஏ. கந்தையா, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. மாணிக்கவாசகர், வடமாகாணக் கடற்றொழிலாளர் சங்கச் சமாஜம், கடற்றொழிலாளர் கூட்டுஸ்தாபனம், கடற்றொழில்இலாகா ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்வார்கள். [ந. நி.]

# உண்ணுவிரதமிருக்க த. அ. ஊழியர் சங்கம் நடவடிக்கை

கொழும்பு, செவ்.

''24-9-56க்குப் பின்னர் அரசாங்க சேவையில் சேர்ந்த சகல தரத்திலுமுள்ள சில்லறைச் சிப்பந்திகளுக்கும் அரசகரும மொழியில் இருந்து விதிவிலக்களிக்குமாறு கோரி தமிழ்ப்பேசும் அரசாங்க பொதுஊழியர் சங்கத்தினுல் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை அரசாங்கத்தினுலும், தமிழ்த்தலைவர்களினுலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. எமது சங்க உறுப்பினர்களான புதிய ஊழியர்கள் அரசகரும மொழிச் சட்டத்தினுல் நீண்டகாலமாக இடர்பாட்டுக்குள்ளாகியுள்ளனர். இப்பிரச்னைக்கு கூடியவிரைவில் நிரந்தரமான ஒரு தீர்வு காணும் முகமாக அரசாங்கத்தினதும், தமிழ்ப்பேசும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களினதும் கவனத்துக்குக் கொண்டுவரும் பொருட்டு சங்க உறுப்பினர்கள் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள அரசாங்கத் திணைக்களங்களுக்கு முன்பாக ''சாகும்வரை'' உண்ணுவிரதம் இருப்பதென்ற தீர்மானம், சங்கத்தின் பொதுச்செயலாளரால் இம் மாதம் 12-ம் திகதி நடைபெறவிருக்கும் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. இவ்விஷயத்தில் சகல மொழிவழித் தொழிற் சங்கங்களின் ஆலோசனையையும் ஆதரவையும் தேடுவதுடன் மற்றும் சகோதரத் தொழிற் சங்கங்களின் ஆதரவையும் தேடுவதற்காக ஆக்கபூர்வமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகிறது.''

இவ்வாறு தமிழ்ப்பேசும் அரசாங்க பொதுஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. பொ. நாகராசா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆணிகுத்தியதால் மரணம்

யாழ்ப்பாணம், புதன்

நாரந்தனையைச் சேர்ந்த கந்தையா சிவநாதன் [28 வயது] என்பவர் காலில் ஆணி குத்தியதால் மரணமானது சம்பந்தமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினுர்.

காலஞ் சென்றவர் ஊர்காவற்றுறையிலுள்ள இரும்புக் கடை ஒன்றில் கடமை ஆற்றுவதாகவும், சில மாதங்களுக்கு முன்னர் இவருக்கு வலது காலில் ஆணி ஒன்று குத்தியதாகவும், அந்தப் புண்ணில் சில தினங்களுக்கு முன்னர் நோவு ஏற்பட்டதால் இவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும், ஆனுல் அவர் நேற்று முன்தினம் மாலை மரணமாகிவிட்டதாகவும் மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் கே. சோமசுந்தராஜாவும் சாட்சியமளித்த பின்னர் ஏற்பு வலியால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [ந. நி.]


**REGAL - JAFFNA**
NOW SHOWING
Charlton Heston
Richard Boone
in
THE WAR LORT


## 5சத முத்திரைக்கு தட்டுப்பாடு

சுழிபுரம், திங்கள்

இப் பகுதியிலுள்ள சகல தபாற்கந்தோர்களிலும் ஐந்து சத முத்திரைக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஐந்து சத முத்திரை தட்டுப்பாடு ஏற்படுவது இங்கு வழக்கமாகிவிட்டது. பண்ணுகம் உப தபாற்கந்தோரில் ஒவ்வொரு மாதமும் ரூபா 25க்கு ஐந்து சத முத்திரை வாங்கப்படுகிறது. வழக்கம்பரையில் உள்ள சேமநிதிச்சங்கத்தினர் இதனுல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# வானெலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

**புதன் 15 - 2 - 67**

செய்திகள்; காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடு பாப்பா—சிறுவர் நிகழ்ச்சி.

இரவு 6-15 பாட்டு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உங்கள் பிரச்னை, 10-00 நேயர் விருப்பம்.

## ஏற்புவலிக்கு குழந்தை பலி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நேற்றுமாலை மரணமான அளவெட்டியைச் சேர்ந்த தம்பிமுத்துசத்தியசீலன் என்ற நான்குவயதுக் குழந்தையின் மரணம்சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடாத்தினுர்.

காலஞ்சென்ற குழந்தைக்கு காதில்இருந்து சீழ்வடிந்ததாகவும் அதனுல் ஆஸ்பத்திரியில் கடந்த வாரம் அனுமதிக்கப்பட்டதாகவும் மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. டாக்டர் விநாயகமூர்த்தியும்சாட்சியமளித்தபின்னர் மரண விசாரணை அதிகாரி ஏற்புவலியால் மரணம் நிகழ்ந்தது எனத்தீர்ப்பளித்தா . [ந. நி

## சந்தையை திறக்க காலி மாநகரசபை தயக்கம்

காலி, திங்கள்

காலி மாநகரசபை விசேஷ கமிஷனரின் அதிகாரத்தின் கீழ் இருந்த போது, கொங்கஹா மரத்தடிச் சந்தியில் மாநகரசபைச் சந்தை ஒன்றைக் கட்ட முன்வந்தார். ரூ. 5000 செலவில் சந்தை கட்டப்பட்டது. இதைச் செய்வதில், அவர் இரண்டு காரணங்களினுல் உந்தப்பட்டார். ஒன்று, நல்ல வருமானம் கிடைக்கும், இரண்டு தலப்பிட்டிய மக்களினது மட்டுமன்றி சுற்றுப்புறங்களிலுள்ள மக்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யும். மீன், இறைச்சி, மரக்கறி விற்பதற்கெனச் சந்தையில் மூன்று நிலையங்களுள்ளன. 1967-ம் வருடத்துக்கு திரு. எம். கே. எம். மசாகிம் என்பவர் ரூ. 6000 கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தார்.


ஆனுல், காலி மாநகர சபையின் நிதிக்கமிட்டி, 17-12-66-ல் சந்தைக்கட்டிடத்தில் மருத்துவசாலையொன்றை நடத்தத்தீர்மானித்தது. இதனுல் வருடம் ரூ. 6000 இழக்க நேரிட்டது. இப்போது, வேறொரு நபர் ஒவ்வொரு நிலையத்துக்கும் ரூ. 6000 கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்க முன்வந்துள்ளார். ஆனுல், ஏதோ உந்தல் காரணமாக, காலி மாநகர சபை இன்னும் சந்தையைத் திறக்க முடிவு செய்யவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியகுடியரசின்நான்காவதுபொதுத்தேர்தல் இன்று ஆரம்பம்

## தேர்தல் முடிவுகள் 21-லிருந்து வெளியாகும்





புதுடில்லி, பெப்ரவரி 14

இந்தியாவின் நான்காவது பொதுத் தேர்தல் நாளை புதன்கிழமை ஆரம்பமாகிறது. இந்தமுறைத் தேர்தலில் 25 கோடி பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். நாட்டின் பல பகுதிகளிலும் வாக்களிப்பு அமைதியாகவும் சுமுகமாகவும் நடைபெற சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுவிட்டன என்று தேர்தல் கமிஷனர் திரு சுந்தரம் அறிவித்துள்ளார். நாளைதான் தமிழ்நாட்டிலும் பொதுத் தேர்தல் ஆரம்பமாகிறது.

இந்தியாவின் நான்காவது பொதுத் தேர்தல் நாளை பல ராஜ்யங்களிலும் ஆரம்பமாகிறது. ஒரு சில ராஜ்யங்களில் ஒரிரு நாட்களிலும் மற்றைய ராஜ்யங்களில் மூன்று நாட்களிலும் தேர்தல்கள் நடைபெறும். தமிழ்நாட்டில் நாளையும் 18, 21-ம் திகதிகளிலும் தேர்தல்கள் நடைபெறும். தமிழ்நாட்டில் முக்கியமான தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகளில் நாளை தேர்தல் நடைபெறுவதால் வாக்களிப்புச் சுறுசுறுப்பாக நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பாதுகாப்பு ஏற்பாடுகள்

பொதுத் தேர்தலின் போது சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைப் பராமரிக்கச் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளும் மற்றைய பந்தோபஸ்து நடவடிக்கைகளும் செய்யப்பட்டுள்ளன.

வாக்களிப்பு நிலையங்கள் யாவும் நிறுவப்பட்டுள்ளன. அதிகாரிகள் இந்த நிலையங்களுக்கு இன்று சென்று பார்வையிடுவார்கள். வாக்களிப்பு நிலையங்களில் அதிகமானவை கிராமங்களில் உள்ளன.

### 79 சட்டசபை தொகுதிகளில் போட்டி


நாளை தமிழ்நாட்டில் மட்டுமின்றி ஆந்திர பிரதேசம் குஜராத் ஆகிய ராஜ்யங்கள் உள்ளிட்டு 79 சட்டசபைத் தொகுதிகளுக்கும், 13 பாராளுமன்றத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறும்.


தேர்தல் நடைபெறும் காலத்தில் நாட்டின் எல்லா பகுதிகளிலும் மதுவிலக்குப் பூரண அமுலில் இருக்கும். மதுவிலக்குத் தவிர்ந்த இடங்களிலும் தேர்தலின் போது கட்டுப்பாட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



### தமிழ்நாட்டில்

தமிழ் நாட்டில் நாளை, காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. சி. என், அண்ணுதுரை தமிழரசுக் கழகத்தலைவர் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் [ம.பொ.சி.] திரைப்பட நடிகர் திரு.எம். ஜி. ராமச்சந்திரன், தி. மு. க. செயலாளர் திரு. மு. கருணநிதி, தமிழ்நாட்டு முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் ஆகியோர் போட்டியிடும் தொகுதிகளில் தேர்தல்கள் நடைபெறுகின்றன.





### சென்னை நகரில் நிகழ்ந்தது

நேற்றுச் சென்னை நகர மக்களை எதிர்பாராத சம்பவமொன்றுபிரமிக்கவைத்தது. தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர் ஒருவர் நேற்று சென்னை நகரம் மீது விமானமொன்றில் பறந்து சென்று தம்மை ஆதரிக்கும் துண்டுப் பிரசுரங்களை விமானத்திலிருந்து பொழிந்துதள்ளிஞர். சென்னை நகர மக்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாகவிருந்தது.

### 359 பெண்கள் போட்டி

இம்முறைத் தேர்தலில் இந்தியா முழுவதிலும் மொத்தம் 359 பெண்கள் போட்டியிடுகின்றனர். தேர்தலில் 13,500 பேர்போட்டியிடுகிருர்கள். இவர்களில் 359 பேர் பெண்கள். 70 பெண்கள் டில்லி சட்ட சபைக்கும், 289 பேர் ராஜ்ய சட்ட சபைகளுக்கும் போட்டியிடுகின்றனர். கடந்த தேர்தலைவிட இந்தத் தேர்தலில் போட்டியிடும் பெண் அபேட்சகர்களின் தொகை குறைந்துள்ளது. கடந்த தேர்தலில் 401 பெண்கள் போட்டியிட்டனர். காங்கிரஸ் சார்பில் 207 பெண்கள் போட்டியிடுகிருர்கள். உத்தரபிரதேசத்தில்தான் அதிகமான பெண்கள் தேர்தலில் குதித்துள்ளனர். தமிழ் நாட்டில் பதினெட்டு பெண்கள் போட்டியிடுகின்றனர்.

### தேர்தல் முடிவுகள்

நாளை புதன்கிழமை தேர்தல் ஆரம்பமாகிறது. இம்மாதம் 21-ம் திகதிவரை தேர்தல்கள் நடைபெறும். தேர்தல் முடிவுகள் இம்மாதம் 21-ம் திகதியிலிருந்து அறிவிக்கப்படும். முதல் முடிவை 21-ம் திகதி காலை 6-05—க்கு இந்திய வானொலியில் அறிவிக்கப்படும்.



தேர்தல் முடிவுகளை இந்திய வானொலி காலை 6-05 லிருந்து இரவு 11-50 வரை அறிவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முக்கியமான முடிவுகள் வானொலிநிகழ்ச்சி நிறுத்தப்பட்டு உடனுக்குடன் அறிவிக்கப்படும். மற்றையவை ஒரு மணி நேர இடைவேளைக்குப் பின்னர் வெளியிடப்படும். தமிழ் நாட்டில் வாக்குகள் இம்மாதம் 22,23,24-ம் திகதிகளில் எண்ணப்படும்.

---

## 6 நாட்களுக்குப் பின்னர் அமெரிக்கா குண்டுவீச்சு

வாஷிங்டன், பெப். 14

வடக்கு வியட்னும் மீது குண்டுவீச்சு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் பி. ஜோன்ஸன் அறிவித்துள்ளார்.

குறுகிய காலத்துக்கு குண்டுவீச்சு நிறுத்தப்பட்டிருந்தது என்றும், ஆனல் சமாதானத்தில் வடக்கு வியட்னும் அக்கறை செலுத்தாததினல் குண்டுவீச்சு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்றும் அமெரிக்க அதிபர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ரஷ்யப்பிரதமர் திரு. கோஸிஜின் லண்டனுக்கு விஜயம் செய்ததை முன்னிட்டே குண்டுவீச்சு நடைபெறுவது தாமதிக்கப்பட்டிருந்தது என்றும் திரு. ஜோன்ஸன் தெரிவித்துள்ளார்.

வடக்கு வியட்னும் தனது துருப்புக்களை தெற்கு வியட்னுமுக்கு தொடர்ந்து அனுப்புகிற தென்றும் தெற்கு வியட்னுமிலுள்ள தனது துருப்புகளுக்கு உணவு, மற்றும் ஆயுதங்களை வடக்கு வியட்னும் அனுப்பிவருகிறதென்றும் இவற்றைத் தடுக்க அமெரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது என்றும் சைகோனிலுள்ள அமெரிக்க இராணுவ பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### பாப்பரசருக்கு ஹோ செய்தி

வடக்கு வியட்னும் அதிபர் டாக்டர் ஹோ-சி-மின், பாப்பரசர் போலுக்கு அனுப்பியுள்ள செய்தியில் தமது முன்னைய நிபந்தனைகளை வலியுறுத்தியுள்ளார்.

சமாதானப் பேச்சுக்கு வழிவகுக்குமாறு பாப்பரசர் விடுத்த கோரிக்கையை ஹோ-சி-மின் நிராகரித்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.

### யுதாண்ட் கவலை

வடக்கு வியட்னும் மீது அமெரிக்கா மீண்டும் குண்டுவீச்சை ஆரம்பித்திருப்பது குறித்து ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கவலை தெரிவித்துள்ளார்.

குண்டு வீச்சு நிறுத்தப்பட வேண்டுமென்று அவர் மீண்டும் அமெரிக்காவை வலியுறுத்தியுள்ளார்.

### ஹானேய் வானெலி

ஹானேய் வானெலி விடுத்துள்ள செய்தியில், சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதற்கு அமெரிக்கா தனது குண்டுவீச்சை நிபந்தனையின்றி நிறுத்தி தென் வியட்னுமிலுள்ள துருப்புகளையும் வாபஸ் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று கோரியுள்ளது.

---

## "சமாதானம் விரும்பாத சீன"

டோக்கியோ, பெப்.14

வியட்னுமில் சமாதானம் ஏற்படுவதை சீன விரும்புகிறதில்லை என்று மாஸ்கோ வானெலி தெரிவித்துள்ளது.

"வியட்னுமில் சமாதானம் ஏற்படுவது சீனவுக்கு ஆபத்தாகவிருக்கும் என்று சீனத் தலைவர்கள் சிலர் கருதுகின்றனர். இதற்குக் காரணம் மா-ஸே-துங்குக்கு எதிர்ப்பு கூடிவிடுமென்றுதான். தனது அரசியல் நாடகத்தில் வியட்னுமை பகடைக்காயாகப்பீகிங்தலைவர்கள்கருதுகின்றனர்" என்றும் மாஸ்கோவானெலிகூறியது

---

# திடீர்ப்புரட்சியில் சுகர்னே பங்கு

## நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றம் அறிவிப்பு

ஜாகர்த்தா. பெப்.14

1965-ல் தோல்வியுற்ற திடீர் புரட்சியில் இந்தோனேஷிய அதிபர் சுகர்னே பங்குகொண்டதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு இந்தோனேஷிய உயர் நீதிமன்றம் மக்கள் ஆலோசனை காங்கிரஸைக் கேட்டுள்ளது.

இந்தோனேஷிய உயர் நீதிமன்றம் இது சம்பந்தமாக 120 பக்கங்களைக் கொண்ட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

1965-ம் ஆண்டில் தோல்வியுற்ற திடீர் புரட்சியில் சுகர்னே எம்மாதிரி பங்கு கொண்டிருந்தார் என்றும் அவருக்கு எதிராக மேற்கொள்ளவேண்டியநடவடிக்கைகளுக்கான காரணத்தையும் நீதிமன்றம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இருபத்தொரு வருட ஆட்சிக்காலத்தில் அதிபர் சுகர்னேஅரசாங்கநிதியைத் தவறான வழிகளில் பயன்படுத்தியிருக்கிருர் என்றும் நீதிமன்றம் குற்றம் சுமத்தியுள்ளது.

---

## சிலம்புச் செல்வருக்கு சாகித்ய அகடெமி பரிசு

புதுடில்லி, பெப்.14

இந்திய சாகித்திய அகடெமி சென்றஆண்டுக்கென பரிசளித்துள்ள 11 நூல்களில் ஒரே ஒரு தமிழ் நூலுக்குத்தான் பரிசுகிடைத்துள்ளது. அது சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் எழுதிய 'வள்ளலார் கண்டஒருமைப்பாடு' எனும் நூலுக்காகும்.

பரிசு நூல்கள், ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையிலுள்ள சாகித்ய அகடெமி செயற்குழுக்களையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டன.

---

## 7பேர் பலி

ஜோகனர்ஸ்பேக், பெப்14

இங்கிருந்து 50 மைல் தூரத்தில் ஏற்பட்ட விமான விபத்தில் 7 பேர் மாண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நாம் செய்யும் வேலைகள் தெய்வத்துக்கான அர்ப்பணமாகும். நமது விருப்பத்தாலும் சக்தியினுலும் இன்றி தெய்வ இச்சையாலும் சக்தியினுலுமே செய்கிருேமென்ற உணர்ச்சி நமக்கு தியாகத்தின் மூலம் ஏற்பட, வேலைசெய்வதே மிக இன்பமாக இருக்கும்.

—சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Box 49 JAFFNA
Telegram EELANADU Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு மாசி 3 [15-2-67]

# இந்தியத் தேர்தல்

குடியரசு இந்தியாவின் நான்காவதுபொதுத் தேர்தல் இன்று ஆரம்பமாகிறது. இந்தியக் குடியரசின் ஆட்சிப் பொறுப்பை யாரிடம் ஒப்படைக்கவேண்டுமென்பதைத் தெரிவு செய்யும் பொறுப்புள்ள இருபத்திஞன்கு கோடி வாக்காளர் தங்கள் கடமையைச் செய்வதற்குப் புறப்படுகின்றனர். இந்த தேர்தலில் இந்திய மக்கள் மட்டுமன்றி அகில உலகமும் ஆவலும் அக்கறையும் கொண்டுள்ளது. உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடாக விளங்கும் இந்தியாவின் வெற்றியில் தான் உலகில் ஜனநாயகத்தின் வெற்றியும் தங்கியிருக்கிறது. இதுவே இந்திய தேர்தலில்உலகம் ஆவல் கொண்டுள்ளதற்குக் காரணமாகும்.

521 அங்கத்தவர்களைக் கொண்ட இந்தியப்பார்லிமெண்டான லோகசபைக்கும் மொத்தம்3,560 அங்கத்தவர்களைக்கொண்ட 17 ராஜ்யங்களின் சட்டசபைகளுக்கும் மொத்தம் 12.800 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். இந்தியாவில் வாக்களிக்கும் உரிமையுடைய வாக்காளர் தொகைமட்டும் இலங்கையின் ஜனத்தொகையைப்போன்று இருபத்திஞன்கு மடங்கு அதிகம். இந்தியாசுதந்திரமடைந்து இருபதாண்டுகளாகிவிட்டன. இந்த இருபதாண்டுகளும் இந்தியாவில் ஆட்சிபீடத்திலிருந்து வந்த காங்கிரஸ் சாதித்தவைகள் என்ன? இனிச்சாதிக்கக்கூடியவை என்ன! காங்கிரசுக்குப் பதிலாகவேறு எந்த அரசியல் கட்சியை அல்லது கட்சிகளை ஆட்சிபீடத்திலமர்த்தி ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தால் நாடு முன்னேற்றம் பெறும் என்பவை பற்றி இந்திய மக்கள், வாக்காளப் பொதுமக்கள் தீர்மானிக்க வேண்டும். இதைத்தீர்மானிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள இருபத்திஞன்கு கோடி மக்கள் அளிக்கும் தீர்ப்பு என்னவென்பது இன்னும் சில தினங்களில் வெளியாகிவிடும்.

உலகில் பல நாடுகளில் குறிப்பாக இந்தியாவோடும் அதற்குப் பின்னரும் விடுதலையடைந்த பல நாடுகளில் ஆயுதப் புரட்சி மூலம் ஆட்சிமாற்றம் நடைபெற்றிருக்கிறது. இதில் பலர் உயிர்த்தியாகம் செய்யவும் நேரிட்டுள்ளது. உலகில் மிகப்பெரிய நாடுகளில் ஒன்ருகவும், உலகில்மிகப் பெரிய ஜனநாயக நாடாகவும் விளங்கும் இந்தியாவில் அமைதியான முறையில் ஆட்சிப்பொறுப்பை மக்கள் ஒப்படைக்கும் புனிதமான மிகப்பெரும் பொறுப்புள்ளது தான், இன்று ஆரம்பமாகும் தேர்தல். பிரிட்டனும், அமெரிக்காவும் ஜனநாயகத்தின் வழிகாட்டிகளாக விளங்கியபோதிலும் உலகில் குறிப்பாக ஆசியாவில் ஜனநாயகம் இன்னும் பரீட்சார்த்த நிலையிலேயே உள்ளது. ஜனநாயக ஆட்சிமுறை வெற்றிபெறுவது மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் வெற்றியிலேயே தங்கியுள்ளது,

தேர்தல் வாக்களிப்பு இன்றுதான் தொடங்குகிறதெனினும் பிரசார தேர்தல் ஆயத்தங்களும் சில மாதங்களுக்கு முன்னரேதொடங்கிவிட்டன. சிறிய நாடான இலங்கையிலேயே தேர்தல்காலத்தில் சிறு சிறு சம்பவங்கள் நிகழ்வதுண்டு. இலங்கையுடன் இந்தியாவை ஒப்பிடுகையில் அங்கு சென்ற சில தினங்களில் நடைபெற்ற சம்பவங்களைப் பெரிதாகக் கருதுவதற்கு இல்லை. சில கூட்டங்களில் கல் வீச்சும் மற்றும் சில சிறு சிறு சம்வங்களும் நடைபெற்றிருப்பது உண்மையே. பிரதமர் திருமதி இந்திரா கல் வீச்சினுல் காயமடைந்ததும் உண்மையே. பிரிட்டனில் சென்றமுறை நடைபெற்ற தேர்தலில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் மீது கூழ்முட்டை வீசப்பட்டதும் மற்றும் நாடுகள் சிலவற்றில் தேர்தல் சமயத்தில் நடைபெறும் சம்பவங்களும், இந்தியாவில்நடைபெற்ற சம்பவங்கள் சகஜமான சிறு விஷயங்கள் என்பதையே எடுத்துக்காட்டுகின்றன. மொத்தத்தில், இந்தியத்தேர்தல்அமைதியான முறையிலேயே நடைபெறுகிறதென்று ஒப்புக்கொள்ளலாம். உணவு, மற்றும் பொருளாதாரக் கஷ்டங்கள் இந்தியாவில் இன்றுஇருப்பினும் தேர்தல் முடிவுகள், ஆட்சியில் பெரிய அளவில் மாற்றம் ஏற்படுத்துவதாக இருக்காதென்று கருதுவதற்கு இடமுண்டு.

## அரசாங்க ஊழியர்

அரசாங்கத்தின் துரித உணவு உற்பத்தி அதிகரிப்புத் திட்டத்தைச் சரியான முறையில் செயல்படாமல் சதிசெய்யும் அரசாங்க ஊழியர்களை தயவுதாட்சண்யமின்றி வேலைநீக்கம் செய்யும்படியும், அரசாங்கத்தின் கொள்கைகள் திட்டங்களை அமுல்நடத்துவதற்கு ஒத்துழைக்காமல் நடந்துகொள்ளும் அரசாங்க ஊழியர்மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படியும் அரசாங்க அதிபர்களின் மகாநாட்டில் பிரதமர் உரைநிகழ்த்துகையில் கேட்டிருக்கிறர். தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த சமயத்திலேயே, அரசாங்க ஊழியர் விஷயத்தில் பிரதமர் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். அதைத் தவறவிட்டிருந்தாலும் 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந் திகதி தமிழ்மொழிச் சட்ட விசேஷ விதிகள் கொண்டுவரப்பட்டதை எதிர்த்து வேலைநிறுத்தத்தில் அரசாங்க ஊழியர் ஈடுபட்டபோதாவது அரசாங்கம் விழித்திருக்க வேண்டும்.

அரசாங்க ஊழியர் தனிப்பட்ட முறையில் வேறுபட்ட அரசியல் கொள்கைகளையுடையவர்களாயின் அதில் தவறில்லை. ஆனால் அரசாங்கம், ஆட்சியிலிருக்கும் கட்சி என்ன கொள்கையின் அடிப்படையில திட்டம் வகுக்கிறதோ அதை அமுல்நடத்த வேண்டிய பொறுப்பும், கடமையும் அரசாங்க ஊழியர்களுடையது. அரசாங்கத்தின் கொள்கை பிடிக்காதவர்கள் தாமாக வெளியேறுவதே அவர்களுக்கும் நாட்டுக்கும் நல்லது. அரசாங்க ஊழியர்கள் நாட்டின் நிரந்தர நிர்வாகத்துக்குப்பொறுப்பானவர்கள். அவர்கள் எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அரசாங்க ஊழியர்களாக இருக்க வேண்டுமே தவிர அரசாங்கக்கட்சி ஊழியர்களாகிவிடக்கூடாது. துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் இந்தநிலை இடம் பெற்றுவிட்டது. இனியும் இந்நிலை நீடிக்கக்கூடாது. இதற்கு ஒரு முடிவுகட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமே. ஆயினும் இன்றைய எதிர்க்கட்சியினரும் நாளை ஆளும் கட்சியினராகலாம். எனவே அரசாங்க ஊழியர் நாட்டின் நலனைக்கருதி அரசாங்க ஊழியராகப்பணி புரிவதற்கும் அவர்கள் அரசாங்கக்கட்சி ஊழியர்களாக மாறுதிருப்பதற்கும் அரசியல் தலைவர்கள் வழிகாட்ட முன்வந்தால் நலம்.

# ஐயாறன் எழுதுவது

திருச்சி விமான நிலையத்தில் இறங்கி, நகரத்துக்குச் செல்லும்போது, தெருக்களிலெல்லாம் காங்கிரஸ், தி. மு. க. கொடிகள் ஏராளமாகப் பறந்து கொண்டிருந்தன. சுவர்களிலெல்லாம் இரட்டைக் காளை மாடுகளும். உதயசூரியனும், முறையே தேர்தல் பிரசாரத்தை இராப் பகலாகச் செய்து கொண்டிருக்கின்றன. திருச்சி பெரியகடை வீதியிலே சில இடங்களில் இரு பக்கங்களிலும் 5 அடிக்கு ஒரு கொடி பறந்து கொண்டிருந்தது. கோவில் திருவிழாவில்கூட இப்படி இராது.

தெருவுக்குக் குறுக்கே கறுப்பும் சிவப்புமான தி. மு. க. கொடிகளும், மூவர்ணக் காங்கிரஸ் கொடிகளும் ஏராளமாகக் கட்டப்பட்டுள்ளன. இந்தத் துணிகளையெல்லாம் கொடிகளாக்கிக் கட்டவும், சுவர்களிலே தேர்தல் பிரசாரம் செய்யவும் பெரும் பணம் செலவாயிருக்க வேண்டும். திருச்சியில் மட்டுமல்ல, சென்னை போன்ற பெரிய பட்டணங்களிலும், சிறு சிறு குக்கிராமங்களிலும்கூட கட்சிக் கொடிகள் பறப்பதுடன் தேர்தல் பிரசாரங்கள் தீவிரமாக நடக்கின்றன. பக்கத்துக்குப்பக்கம் போட்டிக் கொடிகள் பறக்கின்றன. இப்படி இருந்தும் பலாத்கார சம்பவங்கள் மிகவும் குறைவாக இருப்பது ஆச்சரியமே.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தேர்தல் போட்டி மிகவும் பலம். எந்தக்கட்சி வெல்லும் என்று திட்டமாகச் சொல்ல முடியாது.

சென்ற பொதுத் தேர்தலுக்கும் இப்போதைய தேர்தலுக்கும் ஒரு முக்கிய வேற்றுமை. சென்ற தேர்தலில் சுவர்களிலே வகுப்புத் துவேஷ சுலோகங்கள் அதிகமிருந்தன. இப்போது வகுப்புத் துவேஷம் வெகுவாக இல்லை. சில இடங்களில் பிராமணர்களுக்கு மாருக இரண்டொரு துவேஷ சுலோகங்கள் இருந்தன. இது பெரியார் ஈ. வே. ரா. தலைமையிலுள்ள தி. க. கட்சியின் வேலையென்றும், அவரும் அவரது கட்சியும் காங்கிரஸ் கேட்காமலேயே காங்கிரஸை ஆதரிப்பதாகவும், அவர்களது துவேஷப் பிரசாரத்தால், காங்கிரஸுக்கு சில இடங்களில் லாபத்தை விட நஷ்டமே ஏற்படுவதாகவும் ஒரு நண்பர் தெரிவித்தார்.

திருவையாற்றிலே தாலுக்கா காங்கிரஸ் காரியதரிசியாக இருந்த ஒரு நண்பர் இப்போது சுதந்திரக்கட்சிக் காரியதரிசியாகவுள்ளார். அவர் காங்கிரஸ் அபேட்சகருக்கு மாருகவும் தி. மு. க. அபேட்சகருக்காகவும் தீவிரமாகப் பிரசாரம் செய்தார். ராஜாஜி, தி. மு. கவை ஆதரிக்க ஆரம்பித்ததும், அக்கட்சியின் மதிப்புப் பெரிதும் அதிகரித்துவிட்டதென்றும், வகுப்புவாதங்களை அடியோடு விட்டுஇப்போது பொறுப்பான எதிர்க்கட்சியாக அது பொலிகிறதென்றும், பாமர மக்களும்கூட சிக்கலான அரசியல் விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் முறையில் மிக எளிய நடையில் தி. மு. க. பேச்சாளர்கள் மிகத் திறமையாகப் பேசுவதாயும், இதனுல் பொதுமக்களிடையே அரசியல் விழிப்பு அதிகரித்துள்ளதென்றும் சொன்னுர்.

குடியரசு தினத்தன்று அங்கு மகாத்மாகாந்திபடத்துடன் காங்கிரஸ்கட்சியினர் ஒரு பெரிய ஊர்வலத்தை நடத்தினர். 300 ஜோடி காளை மாடுகளுக்கு மேல் ஊர்வலத்தில் கலந்து கொண்டன. ஊர்வலத்தின் முன்புறம், கொம்பு, தாரை, தப்பட்டையுடன் சிலர் தி. க. கொடிகளைத் தாங்கிக் கொண்டு சென்றனர். தேர்தல் வாதப் பிரதிவாதங்களடங்கிய போஸ்டர்களை கலர் எழுத்துக்களில் எழுதி இரு போட்டிக் கட்சிகளும் தெருக்களிலே மூலைக்குமூலை வைத்துள்ளனர்.

கொடிகள், ஊர்வலங்கள் போஸ்டர்கள் இவைகளுக்கு மட்டும் இருதரப்புக்கும் இத்தேர்தலில் பெருந்தொகை செலவாகியிருக்க வேண்டும். இலங்கையில், இவற்றுக்கெல்லாம் தடைபோட்டு தேர்தலை அமைதியாக நடத்துவதாகக் கூறியதும் இலங்கையை அந்த நண்பர் பாராட்டி இந்தியாவிலும் அவ்வித தேர்தல் சீர்திருத்தம் வந்தால் நல்லதென்று தெரிவித்தார். தேர்தல் செலவு குறைவதுடன் அமைதியும்வெகுவாக பாதுகாக்கப்படுவதாகஇருக்கும்.

ஊர் மட்டுமல்ல, ஒவ்வொரு குடும்பம்கூட இத்தேர்தலால் பிளவுபட்டுள்ளதைக் கண்டேன். புருஷன் தி. மு. க.வையும், மனைவி காங்கிரஸையும் ஆதரிக்கின்றனர். பல வீடுகளுக்கு முன் மாக்கோலங்கள் இரட்டைக் காளை, அல்லது உதயசூரியன்களாகக் காட்சியளிக்கின்றன. இத்தேர்தல்மூலம் நாட்டு ஒற்றுமை மட்டுமன்றி, வீட்டு ஒற்றுமையும் சீர்குலைந்துவிடுமோ என்று நினைக்கக்கூடிய அளவுக்குப் போட்டிகளும் உணர்ச்சிகளும் அவ்வளவு தீவிரமாக இருப்பதைக் கண்டேன்.

எம். ஜி. ஆர். சுடப்பட்ட தினத்திலே அதிகாலையில் ஒரு பேப்பரை வைத்துக் கொண்டு ஓரன்பர் அப்படியே அழுதுவிட்டார். தமது இதயம் வெடித்துவிடும் போல் உள்ளதாகவும் சொன்னார். ஊரெங்கும், நாடெங்கும் இந்தப் பேச்சுத்தான். சுட்டதற்குக் காரணம் சொந்த விஷயமா அல்லது அரசியல் போட்டியா என்பது பற்றியும் மூலைக்குமூலை வாக்கு வாதங்கள்.

பள்ளிக்கூட மாணவர்களுக்கு எவ்வளவு உற்சாகம்! காங்கிரஸை இத்தேர்தலில் எப்படியும் தோற்கடிக்க வேண்டுமென்று எதிர்க் கட்சிக் கூட்டணி முனைந்துள்ளது. ஆனால் தமிழகத்தில் மட்டுமின்றி அநேகமாகப் பல மாகாணங்களிலும், தலைமையிலும் காங்கிரஸே, முன்னைவிடக் குறைந்த பலத்துடன் வெற்றி பெறுமென்றும் விஷயமறிந்த அரசியல் வட்டாரங்களில் பேச்சுகள் அடிபடுகின்றன.

மதுரையிலே ஒரு காங்கிரஸ் மாஜி எம். பி.யை பொதுவாக இந்திய அரசியல் நிலையைப் பற்றிக் கேட்டேன். அவர் இத்தேர்தலில் போட்டியிடவில்லை. இந்தியாவின் அமைதியைச் சீர்குலைக்க வெளி வல்லரசுகள் போட்டி போட்டுக் கொண்டு ஈடுபட்டுள்ளனவென்றும், இதில் சீனவெற்றி பெற்றுள்ளதென்றும் குறிப்பிட்டு காங்கிரஸுக்குள்ளாகவே கோஷ்டிப் பிரிவினைகள் இருப்பதாகவும், சென்னையில் முதல் மந்திரி பக்தவத்சலத்தாருக்கு எதிர்ப்பு அதிகமென்றும் அவரை ஒதுங்கியிருக்குமாறு தலைவர் காமராஜ் கேட்டும் அவர் சம்மதிக்கவில்லை என்றும் கூறினார்.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வரவேண்டும் என்பதைப் பற்றி இன்று முதல் ஒரு வாரத்துக்குள் 25 கோடி இந்தியப் பொது மக்கள் தீர்ப்பளிப்பர். எல்லாக் கட்சிகளிலும் திறமைசாலிகளும், அனுபவஸ்தர்களும் பலர் உண்டு. தேர்தலுக்குப்பின் அவர்கள் வீண் போட்டிகளைவிட்டு, பல கட்சிதேசிய அரசாங்கத்தை அமைத்து, நாட்டு மக்களின் சேவையில் ஒத்துழைக்குமுயுமாயின் அது எவ்வளவு நன்ருக இருக்கும்.

பொள்ளல் இவ்வுடலைப் பொருளென்று பொருளுஞ் சுற்றமும் போகமுமாகி, மெள்ள நின்றவர் செய்வன வெல்லாம் வாராமே தவிர்க்கும் விதியானை, வள்ளல் எந்தமக்கே துணையென்று நாளும் அமரர் தொழுதேத்தும் அள்ளலங் கழனிப் பழனத் தணி ஆரூரானை மறக்கலுமாமே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

[எங்கும் பொள்ளல்களாய் உள்ள இவ்வுடம்பை உறுதி என்று கொண்டு, செல்வமும் படைகளும் இன்பமுமாய் நிற்கின்றவர்கள் செய்கின்ற மயக்கங்களையெல்லாம் நம்மிடத்து வாராது விலக்குகின்ற, நன்னெறி உள்ளவனுகிய, தேவர்கள் நாள் தோறும் 'வள்ளல்' என்றும் 'எங்களுக்குத்துணை' என்றும் சொல்லித் துதிக்கின்ற சேற்றையுடைய கழனிகளையுடைய பண்ணையிடத்ததாகிய அழகிய திருவாரூர் இறைவனை யான் மறத்தலும் இயலுமோ.]

## பால் இல்லை?

நாரந்தனை, திங்கள்

சின்னமடுப் பாடசாலையில் மாணவர்களுக்கென அரசாங்கத்தால் வழங்கப்படும் மதியஉணவு 'கெயர்' சில மாதங்களாக கொடுபடவில்லையாம். பிள்ளைகளுக்கு ஏனிந்தப் பால் கொடுக்கப் படவில்லையென பெற்றோர் கேட்கின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "இருபதாம் நூற்றுண்டில் இப்படி ஒரு கொடுமையா?"

யாழ்ப்பாணம், செவ். "இந்தத் தேசத்தில் பின் தங்கியுள்ள சகல மக்களினதும் நல்வாழ்வுக்காக ஏழை மக்கள் உட்படப் பலரும் முயல வேண்டும். சந்திரனுக்கு மனிதன் போக முடியுமென்ற நிலை ஏற்பட்டுள்ள இந்த இருபதாம் நூற்ருண்டில் இன்னும் இப்படியான பத்தாம்பசலி சாதி அமைப்பு முறையை வைத்திருப்பது கொடுமையிலும் கொடுமை என்றே சொல்ல வேண்டும். இந்தச் சாதிக் கொடுமையை ஒழித்து சமத்துவத்துடன் வாழ இப்படியான படிப்பகங்கள் அவசியம்."

கந்தர்மடம் முற்போக்கு வாலிபர் சங்க வாசிகசாலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் யாழ்ப்பாண மாநகரசபை மின்சார இஞ்சினியர் திரு. இ. வைத்தியலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். திரு. மு. இராசு தலைமை வகித்தார்.

"நாட்டின் பல பகுதிகளிலும் பரந்து கிடக்கும் ஏழை மக்களையெல்லாம் ஒன்று சேர்த்துக் கொண்டு ஒரு பரந்த இயக்கத்தை நடத்துவதன் மூலம் மக்களிடையே வேரூன்றிக் கிடக்கும் தீயசக்திகளை அழித்து ஒழித்துவிடலாம்" என்று வி. ஏ. கந்தசாமி பேசுகையில் குறிப்பிட்டார்.

சாதியையும் அதன் அடிச்சுவட்டையும் வேரோடும் வேரடிமண்ணேடும் அகற்றிவிட நடக்கும் போராட்டங்களில் சகல நல்லெண்ணம் கொண்டவர்களும் ஒத்துழைக்க வேண்டும்" எனத் திரு. டானியல் கேட்டுக் கொண்டார்.

திருவாளர்கள்: மு. கார்த்திகேசன், க. முருகரத்தினம், இ. பூவிலிங்கம், வை, இராசதுரை, அ. குணரத்தினம் ஆகியோரும் பேசினர்.

## தொழிற்சாலைகளை உருவாக்க பணமுள்ளவர்கள் முன்வரவேண்டும்

### சங்கானை பட்டினசபைத் தலைவர் யோசனை

சங்கானை, செவ். "கிராமங்களில் சிறு கைத்தொழில் பெருகுவதால் படித்த இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை நீங்குவதற்கு வழி பிறக்கும். பணம் படைத்த பெரியார்கள் தொழிற்சாலைகளை உருவாக்க முன்வந்தால் அரசாங்கத்தை எதிர்நோக்கும் பிரச்னைகளும் ஓரளவு நீங்கிவிடும்."

சங்கானையில் நேற்று அரிசிஆலையொன்றைத் திறந்துவைத்து சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றப்பலம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது-

சங்கானையில் மின்சக்தி மூலம் இயங்கும் இரண்டாவது ஆலையைத் திறந்து வைப்பதில் பெருமகிழச்சி அடைகிறேன். அரசினர் விவசாயத்தை உற்பத்தி செய்வதிலேயே பெருங் கவனம் செலுத்துகின்ருர்கள். ஆகையால் குறைந்த செலவில் மின்சக்தி மூலம் விவசாயத்தை உற்பத்தி செய்து பெருக்கிக் கொள்வதில் விவசாயிகளுக்குப் பெரும் லாபம் கிடைப்பதோடு நாட்டின் உணவுப் பிரச்னையும் ஓர் அளவு தீர்ந்துவிடும்."

## சட்டவிரோதக் குடியேற்ற வாசிக்கு புகலிடம் அளித்ததாக வழக்கு

சாவகச்சேரி, திங்கள் '1963-ம் ஆண்டு ஏப்ரல் 26ந் திகதி கிளிநொச்சிப் பொலிஸ்நிலையத்தில் கடமையாற்றினேன். அன்று இரவு 7-30க்கு ஆனையிறவிலுள்ள ஒரு கடைக்குச் சென்று இருவரைச் சந்தேகத்தின்பேரில் கைது செய்தேன். அதில் ஒருவர் சந்திராகுருயர். அவரிடம் நான் கேள்விகள் சில கேட்டபொழுது, 'தான் 1962-ம் ஆண்டு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தோணியில் வேறும்பலருடன் காங்கேசன்துறைக்கடலால் வந்திறங்கியதாகவும் கிளிநொச்சியில் வேலைசெய்வதாகவும் கூறினர்', நான் போனபோது சந்திராகுருயர் அக்கடையில் வேலை செய்து கொண்டிருந்தார்'.

இவ்வாறு சட்டவிரோதக்காரர் ஒருவருக்குப் புகலிடம்கொடுத்ததாக ஏ.விஜயரட்ணம் என்பவர்மீது வவனியாப்பொலிசாரால் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் சாட்சியமளித்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஆர்.ஏ. மித்துறட்ண என்பவர் கூறினர். இவ்வழக்கு இன்றுகாலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் மாஜிஸ்திரேட் திரு. ஆர். இளையபெருமாள் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரிசார்பில் அட்வகேட் திரு.ரி.தம்பித்துரை, புறக்டர்கள் எஸ். பி.மயில்வாகனம், வி.செல்லத்தம்பி ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். வழக்காளிதரப்பில் வவனியாப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் வழக்கை நடத்தினர். பொலிஸ்கான்ஸ்டபிள் வி.கே. தர்மசேனு ராணுவத்தைச்சேர்ந்த பி. அன்ரன் ஆகியோரும் சாட்சியமளித்த பின்னர் மேல் விசாரணை இம்மாதம் 21ந் திகதிவரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது,

## 'அரசாங்கத்துக்கு ஆதரவளியுங்கள்'

—ஆர்.ஜி.

கொழும்பு, திங் அரசாங்கத்தின் விவசாயத்திட்டத்துக்கு எல்லோரும் தமது கருத்து வேறுபாடுசளை மறந்து ஆதரவளிக்கவேண்டுமெனதிரு.ஆர்.ஜி.சேனநாயகா கேட்டுள்ளார்.

விவசாயத்துக்கு முக்கியமளித்ததால்தான் பர்மா போன்றநாடுகள் உணவு விஷயத்தில் சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கிறது என்றுஅவர் மேலும்கூறியுள்ளார்.

விவசாயப்படை அமைப்பதை அவர்வரவேற்றுள்ளார்.

## விவசாயப் படை

ஊர்காவற்றுறை.செவ் சரவணைக்கிராமசேவையாளர் பிரிவில் இருந்து பதினைந்துக்கு மேற்பட்டவாலிபர்கள் விவசாயப்படையில் சேருவதற்கு விண்ணப்பித்துள்ளனர். தீவுப்பகுதியின் ஏனைய கிராமங்களிலும் வாலிபர்களை விவசாயப் படையில் சேர்ப்பதற்கு கி.மு. சங்கங்கள்முயற்சித்து வருகின்றன.

திருக்கோணமலைக் கடிதம்

# கல்வி மந்திரி 26-ல் விஜயம்

## இந்திய உதைபந்தாட்டக் கோஷ்டி ஏப்ரலில் வருகிறது

—நமது நிருபர்—

விசேஷித்த வாலிப சுவிசேஷ கூட்டங்கள் திருக்கோணமலையில் இம்மாதம் 16-ம் திகதி முதல் 19-ம் திகதி வரைபெந்தகோஸ்தெ சபை மண்டபத்தில் நடைபெறும். இத்தினங்களில் சுவிசேஷ ஆராதனைகளும் தெய்வீக சுக அனுஷ்டானங்களும் தொடர்ந்து நடைபெறுமென அறியப்படுகின்றது. இப்படியான கூட்டங்கள் திருக்கோணமலையில் நடைபெற விருப்பது இதுவே முதல் தடவை யென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

* * *

### மந்திரி விஜயம்

கல்வி அமைச்சர் இம்மாதம் 26-ம் திகதி திருக்கோணமலைக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்வார். அமைச்சரின் விஜயம் சம்பந்தமாக பல ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை சுமார் 20 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறையாக இங்கு விஜயம் செய்யவிருக்கின்ருர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### உதைபந்தாட்டப் போட்டி

திருக்கோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக வீரருக்கும் மட்டக்களப்பு பறங்கியர் விளையாட்டுக்கழக வீரருக்குமிடையே திருக்கோணமலையில் "டொக்யாட்" விளையாட்டு மைதானத்தில் போட்டி ஆரம்பமாகினது திருக்கோணமலை உதவிப் போலிஸ் சுப்பிரிண்டன்டன் ஒலிம்பிக்ஸ் வீரர்களை மட்டக்களப்பு வீரர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஒலிம்பிக்ஸைச் சேர்ந்த திரு. வடிவேலு, இம்மானுவேல், எஸ். தம்பையா, எம். எஸ். சயீட், புஸதேனியா, தெய்வேந்திரன், சண்முகம், ஏ. கொலின் சுகததாஸா, தனபாலசிங்கம் தங்கவேலாயுதம் ஆகியவர் விளையாடினர். திரு. வடிவேலு கோஷ்டிக்கப்டனுகவும், திரு. இம்மானுவல் கோல் கீப்பராகவும் இருந்தனர்.

போட்டி ஆரம்பமாகி 15 நிமிடங்களால் ஒலிம்பிக்ஸ் வீரர் சண்முகத்தின் உதவியுடன் கொலின் ஒரு கோலை முதல் முதலில் போட்டார். இதைத் தொடர்ந்து அதே கொலின் 2-வது கோலை மிகவும் சாதாரணமாக அடித்துக்கொண்டார், இடைவேளையின் போது 2-0 ஆக இருந்த ஆட்டம் இடைவேளைக்குப் பின் 20 நிமிடங்களால் தங்கவேலாயுதத்தின் உதவியுடன் கொலின் தொடர்ந்து 3 வது தடவையாக பந்தை வலைக்குள்ளிட்டதும் அங்கு குழுமியிருந்த ரசிகர்கள் பலத்த கரகோஷத்துடன் ஆரவாரித்தனர். இதன் பின்னர் மட்டக்களப்பு விளையாட்டு வீரர்கள் மிகுந்த உற்சாகத்துடன் துரிதமாக விளையாடினர். ஆனுல் இவர்களால் கோல் எதுவும் போடமுடியவில்லை. ஒலிம்பிக்ஸ் வீரர் கொலின் தொடர்ந்து 4-வது தடவையாக தாமாகவே சுலபமாக ஒரு கோலை அடித்தார். அடுத்த 10நிமிட நேரத்தில் ஆட்டம் திருக்கோணமலை ஒலிம்பிக்ஸ் கோஷ்டியினரின் வெற்றியுடன் 4—0 என்ற முடிவுடன் முற்றுப் பெற்றது. மட்டக்களப்பு வீரர்க்கு [illegible] கோலை மிகவும் சுலபமாக அடிக்கக்கூடிய சந்தர்ப்பங் [illegible] கள் கிடைத்திருந்தபோதிலும் ஒலிம்பிக்ஸ் வீரர்களான எம். எவ். சயீட், தம்பையா ஆகிய இருவரின் விளையாட்டினுல் அவை தடுக்கப்பட்டன.

இப்போட்டிக்கு திரு. ஏ. அரியநாயகம் மத்தியஸ்தம் வகித்தார்.

ஏப்ரல் மாதம் 9-ம்திகதி திருக்கோணமலை ஒலிம்பிக்ஸ் கழக உதைபந்தாட்ட வீரர்சுளுக்கும் இந்திய நாட்டுக் கோஷ்டி ஒன்றுக்குமிடையே ஒரு விறுவிறுப்பானமோதல் டொக்யாட் விளையாட்டு மைதானத்தில் நடாத்த ஏற்பாடாகியிருக்கின்றது.

வெளிநாட்டுவிளையாட்டுக் கோஷ்டியுடன் திருமலை விரர்கள் மோதிக் கொள்ள விருப்பது இதுதான் முதற் தடவையாகும்.

இலங்கை—இந்திய ஒப்பந்தம்

## 'நாட்டிலிருந்து வெளியேருதவர்கள் குடியுரிமை வழங்கப்படவேண்டும்'

### மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் வற்புறுத்தல்

நாவலப்பிட்டி, செவ்வாய் தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும், இலங்கை, இந்திய ஒப்பந்த அமுல்மசோதாவின் கீழ் இந்நாட்டைவிட்டு வெளியேறுபவர்களைத் தவிர ஏனையோருக்கு உடனடியாக குடியுரிமை வழங்கிஇந்நாட்டவர்க்கு உள்ளதுபோல் சகல உரிமைகள் வாய்ப்புகள் ஏற்படுத்தித்தரக் கூடியதாகத்திருத்தப்படவேண்டுமென்று மலைநாட்டு எழுத்தாளர்மன்றம் வற்புறுத்தியிருக்கிறது.

மேற்படிமன்றத்தின் ஆண்டுவிழா அட்டனில் புனித பொஸ்கோஸ்கல்லூரி மண்டபத்தில் பெரி. கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கண்டி. நாவலப்பிட்டி, பதுளை, பண்டாரவளை, மாத்தளை இரத்தினபுரி, இறக்குவானை முதலிய இடங்களிலிருந்து சுமார் 200க்கு மேற்பட்டஎழுத்தாளர்கள் கலந்துகொண்டனர்.

விழா ஆரம்பத்தின்போது திரு.தமிழோவியன் வரவேற்புரை நிகழ்த்தினர். அதை அடுத்து எழுத்தாளர் அறிமுகம் நடந்தது. மலையக மக்களின் குடியுரிமை, கல்விப்பிரச்னை என்பனபற்றி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தோட்டப்பாடசாலைகளைப்பொறுப்பேற்றுகனிஷ்ட தராதரத்துக்கு அவைகளை உயர்த்தவேண்டும். அப்பாடசாலைகளில் கூடுமானவரை மலையக இளைஞர்களை ஆசிரியர்களாக அமர்த்த வேண்டுமென்றும் ஒரு தீர்மானத்தில் கோரப்பட்டது.

பிராந்திய ரீதியில் இலக்கியவட்டங்களை நிறுவிஇயங்கச்செய்வதென்ற மன்றத்தின் முடிவிற்கிணங்க நடப்புவருட நிர்வாகசபை தேர்விச் மாற்றங்கள்செய்யப்பட்டன .

தலைவர்.திரு. ரா. மு.நாகலிங்கம், உப தலைவர்கள், திரு. இர. சிவலிங்கம், திரு. எஸ். எம். கார்மேகம், இணைச்செயலாளர்கள், திரு. பெரி.கந்தசாமி, திரு.தெளிவத்தை யோசப். பொருளாளர், ஏ. வி. பி.கோமஸ். மன்ற செயற்குழு உறுப்பினராகவும். பிராந்தியகுழுக்களின் அமைப்பாளராகவும் முறையே திருவாளர்கள். தமிழோவியன், எஸ். கணேஷ்,[பதுளை] ஜே.அந்தனி,ஏ.பிலிப்[இரத்தினபுரி] பி.மகாலிங்கம்,எஸ். பிரேமசம்பு [நாவலப்பிட்டி] க. இராமச்சந்திரன், பெ. கோவிந்தசாமி, [கண்டி] ராமசுப்பிரமணியம் ந. க. தியாகராஜா [அட்டன்] ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

## அதிக விலைக்கு மல்லி விற்ருராம்

வல்வெட்டித்துறை, திங். பருத்தித்துறை யிமென் வீதியிலுள்ள கடையொன்றில் சம்பளத்திற்கு விற்பனையாளராகநின்ற நாகமுத்து செல்லையா என்பவர், ஒரு இருத்தல் மல்லியை 3 ரூபாவிற்கு விற்றதாகப் பருத்தித்துறைப்பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டு மாஜிஸ்திரேட் திரு. ஆர். இளையபெருமா முன்னிலையில்ஆஜர் செய்யப்பட்டபோது, எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே, மாஜிஸ்திரேட் எதிரியை 500 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார். அதே கடையில் 72 ருத்தல் மல்லி இருக்கக் கண்டு அவற்றையும் பொலிசார் கைப்பற்றினர்.

## "நிலை மாறவேண்டும்"

உடுப்பிட்டி, திங்கள் "இலங்கை மக்கள் எதற்கும் பிறநாடுகளையே நம்பி வாழும் இழிவு நிலையை அடைந்துள்ளனர். பிறநாட்டுப் பொருட்களை விரும்பி வாங்கும் நிலை மாறினுல் தான் எமது நாடு முன்னேறும்" என்று திரு. கே. நடராசா நெல்லியடியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர். கூட்டத்திற்கு திரு. கே. தர்மலிங்கம் தலைமைவகித்தார். மற்றும் பலரும் பேசினர்.

## 150-வது பிறந்தநாள்

லண்டன்,பெப்.14 ரஷ்யாவிலுள்ள அஸெர்பைஜான் எனுமிடத்தைச் சேர்ந்த ஷிறிம் டொஸாநொவ் என்பவர் தமது 150-வது பிறந்த தினத்தை சிறப்பாகக்கொண்டாடினர் மூன்ருவது தடவையாக திருமணம் செய்த இவருக்கு 12 பிள்ளைகள் உண்டு. இவரதுமனைவியின்வயது80.

## புதிய வழக்கறிஞர்

வல்வெட்டித்துறை, திங். அச்சுவேலியைச் சேர்ந்த திரு. கந்தையாவின் மகன் திரு. க. உலகநாதர், நீதியரசர்கள் திரு. வி. மாணிக்கவாசகர், திரு. ஜி. சமரவிக்கிரமா ஆகியோர் முன்னிலையில் வழக்கறிஞராகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் முன்பு ஆசிரியராகவும், லிகிதராகவும் கடமையாற்றியவர். மல்லாகம், யாழ்ப்பாணம் நீதிமன்றங்களில் இவர் தொழிலாற்றுவார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

— சென்னையிலிருந்து நமதுநிருபர் கா. யோகநாதன் எழுதுவது —

# காங்கிரஸுக்கா எதிர்க்கட்சிகளுக்கா வெற்றி?

# எதுவும் சொல்லமுடியாத கடும்போட்டி

## 1962 தேர்தல் நிலையும் இன்றைய நிலையும்

தமிழ் நாட்டில் இன்று வாக்களிப்பு ஆரம்பமாகிறது. தமிழ் நாடு சட்ட சபைக்கான 234 தொகுதிகளிலும் போட்டியிடும் கட்சி விபரங்கள் காங்கிரஸ்— 234, தி.மு.க.— 173 சுதந்திரா— 27, வலதுசாரி கம்யூனிஸ்ட்— 33, இடதுசாரிகம்யூனிஸ்ட்— 20, ஜனசங்கம்— 24, பிரஜா சோஷலிஸ்ட்— 4, சோஷலிஸ்ட்— 3, குடியரசு— 14, சுயேச்சைகள்— 243. இவற்றுள் வலதுசாரி சம்யூனிஸ்ட்டுகளும் ஜனசங்கமும் எதிர்ப்பு அணியில் சேரவில்லை.

டெல்லி பாராளுமன்றத்திற்கான 39 தொகுதிகளிலும் போட்டியிடும் கட்சிகள் விபரம்: காங்கிரஸ் — 39, தி. மு. க.— 25, சுதந்திரா— 8, வலதுசாரி கம்யூனிஸ்ட்— 6, இடதுசாரி கம்யூனிஸ்ட்— 5, ஜனசங்கம்— 4, பிரஜாசோஷலிஸ்ட்— 1, குடியரசு— 2, சுயேச்சை— 37. இவற்றிலும் வலதுசாரி கம்யூனிஸ்களும், ஜனசங்கமும் எதிர்ப்பு அணியில் சேரவில்லை.

சட்ட சபையில் உள்ள 234 தொகுதிகளில் 50-ல் நேரடிப் போட்டி, 105-ல் மும்முனைப் போட்டி, 24-ல் 5 பேர் போட்டி, 4-ல் 6 பேர் போட்டி, 4-ல் 7 பேர் போட்டி. நேரடிப் போட்டியில் காங்கிரஸும் எதிர்ப்பு அணியினரும் மோதுகின்றனர். மும்முனைப் போட்டியில் காங்கிரஸ் எதிர்ப்புஅணி சசுயேட்சை போட்டியிடுகின்றனர். சுயேட்சையின அதிக வாக்கை பெற மாட்டார்கள். ஆதலால் 105 மும்முனைத் தொகுதிகளிலும், காங்கிரஸினரும், எதிர்ப்பு அணியும் கடுமையாக மோதக் கூடிய நிலைமையுள்ளது.

டில்லி பாராளுமன்றத்துக்கான 39 தொகுதிகளிய் 10-ல் நேரடிப் போட்டி, 17-ல் மும்முனைப் போட்டி, 7-ல் 4 பேர் போட்டி 3-ல் 5 பேர் போட்டி, இவற்றை தவிர மேட்டூர் தொகுதியில் 6 பேரும், திருத்தணி தொகுதியில் 7 பேரும் போட்டியிடுகின்றனர்.

### தேர்தல் சின்னங்கள்

தமிழ் நாட்டில் போட்டியிடும் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட தேர்தல் சின்னங்கள் வருமாறு காங்கிரஸ் —காளைமாடு. தி. மு. க. —உதயசூரியன், சுதந்திரா —நட்சத்திரம், வலது கம்யூனிஸ்ட் —கதிர் அரிவாள், இடது கம்யூனிஸ்ட் —அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் ஜனசங்கம் —தீபம், குடியரசு— யானை, சோஷலிஸ்டு —ஆலமரம், பிரஜா சோஷலிஸ்டு — குடிசை, முஸ்லீம் லீக்கிற்கு தனிப்பட்ட தேர்தல் சின்னம் கொடுபட்வில்லை. இவர்களுக்கும் சுயேட்சைகளுக்கும், பூ, சிங்கம, மண்வெட்டி, சைக்கில் சின்னங்கள் கொடுபடடுள்ளது. முஸ்லிம் லீச்சார்பில் போட்டியிடும் அபேட்சகர்கள் சுயேட்சையில் அடங்கியுள்ளனர். இதே போல், நாம் தமிழர், தமிழரசு கழகம், உழைப்பாளர் கட்சி, போர் வாட் புளக், ஆகியவை சுயேட்சையில் அடங்கியுள்ளன.

### பெண்களும் போட்டி

தமிழ்நாட்டில் 18 பெண்கள் போட்டியிடுகின்றனர். சட்டசபைக்கு 15 பெண்களும், டெல்லி பாராளுமன்றத்திற்கு 3 பெண்களும் போட்டியிடுகின்றனர். காங்கிரஸ் சார்பில் 13 பெண்களும், தி. மு. க. சார்பில் 3 பெண்களும், இடதுசாரி கம்யூனிஸ்ட் சார்பில் ஒரு பெண்ணும், உழைப்பாளர் கட்சியில் ஒரு பெண்ணும் போட்டியிடுகின்றனர்.

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானத்திற்கும், நாம் தமிழர் கட்சித் தலைவர் ஆதித்தனுருக்கும் தி. மு. க. வின் சின்னமான உதயசூரியன் சின்னம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களது கட்சியும் மற்றும் சில கட்சிகளும் அதிகாரபூர்வமாக, கட்சிகளாக அங்கீகரிக்கப்படாததே இதற்குக் காரணம்.

### சென்னை மாவட்டம்

திருவல்லிக்கேணித்தொகுதியில் ஜனசங்கம் சார்பில் போட்டியிடும் விசுவநாதராவிற்கு அவ்வளவு செல்வாக்குக்கிடையாது. 1954ம் ஆண்டில்இத்தொகுதிகாங்கிரஸ் கையில்இருந்தது. 62-ம் ஆண்டுத் தேர்தலில் தி. மு. க. கைக்கு வந்தது. காங்கிரஸ் வேட்பாளரை நெடுஞ்செழியன் 10,000 மேலதிக வாக்குகளால் 62ல் வெற்றி பெற்றார். இம்முறை எதிர்க்கட்சிகள் ஒன்றுதிரண்டிருப்பதால் மேலதிக வாக்குகள் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1962ல் வோட்டுநிலைவரம் வருமாறு — மொத்த வோட்டு 92042, பதிவானவை— 66727, நெடுஞ்செழியன் (தி.மு.க 33723. சிவனேசன் (காங்கிரஸ் 22903, வரதாச்சாரி (சுதந்திரா 7418, நடராஜன் சுயேச்சை 1276. எதிர்ப்பு அணி அமைக்கப்பட்டிருப்பதால் வெற்றி நிச்சயம்என தி.மு.க. கூறுகிறது. இழந்த இடத்தை மீண்டும் பெற காங்கிரசும் முயற்சிக்கிறது. இதேநிலைமைதான் சென்னை நகரத்திலுள்ள மற்றும் தொகுதிகளிலும் நிலவுகின்றது.

### மதுரை மாவட்டம்

மதுரைமாவட்டத்தில் எல்லாத்தொகுதிகளிலும் கடும்போட்டி நிலவுகிறது. மந்திரி கக்கன் போட்டியிடும் மேலூர் தெற்கு தொகுதியில் தி. மு. க. வினர் வெற்றி பெறுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. மந்திரி கக்கனை எதிர்த்து, தி. மு. க. சார்பில் ஓ பி. ராமன் போட்டியிடுகிறார். இத்தொகுதியில் 21ந்தேதிதேர்தல் நடைபெறுகிறது. மந்திரி கக்கன் 10 வருடங்களாக இப்பதவி வகித்துவருகிறார். பத்தாம் வகுப்பு வரை படித்தவர். இவருடன் போட்டியிடும் ராமன் ஒரு வழக்கறிஞர், அத்துடன் ஒரு பி.ஏ. பட்டதாரி. எதிர்ப்பு அணியினர் ஒன்று சேர்ந்திருப்பதால்மந்திரிகக்கன் வெற்றியில் சந்தேகம் எழுகிறது. 62ம்ஆண்டுஒட்டு நிலவரம் வருமாறு-மொத்த வோட்டுகள்- 94071, பதிவானவை 70134, அம்பலம் [காங்கிரஸ்] 28986, நடராசன் [தி.மு.க.] 20986, பொன்னுசாமி [சுதந்திரா] 11279, வீரண்ணன் [கம்யூனிஸ்ட்] 5867. கடந்ததேர்தலில் சமயநல்லூர் தொகுதியில் வெற்றிபெற்றமந்திரி கக்கன் இம்முறைமேலூரில் போட்டியிடுகிறார். மதுரையிலுள்ள ஆறு தொகுதிகளிலும் கடும் போட்டிஏற்பட்டுள்ளது.

### செங்கல்பட்டு மாவட்டம்

செங்கல்பட்டு மாவட்டத்திலும் எல்லாத்தொகுதிகளிலும் கடும்போட்டி காணப்படுகிறது. இங்குள்ள திருவொற்றியூர் சட்டசபைத் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் வெங்கடேசுவர நாயுடுவும், தி.மு. க. சார்பில் சென்னை முன்னாள் மேயர் அ. பொ. அரசுவும் போட்டியிடுகின்றனர். கடந்த தேர்தலில் அ. பொ. அரசு 250 வாக்குகள்வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். இம்முறை எப்படியும் இத்தொகுதியை கைப்பற்றி விட வேண்டுமென தி.மு.க. வினர்பாடுபட்டு வருகின்றனர். எதிர்ப்பு அணியினரும் முழுமூச்சாக வேலை செய்து வருகின்றனர். 62ல் வோட்டு நிலைவரம்-மொத்த வோட்டுகள் 94,462, பதிவானவை 65,887, கோவிந்தராஜநாயுடு [காங்கிரஸ்] 29,896. அ. பொ. அரசு [தி. மு. க.] 29, 646, பலராமன் [சோசலிஸ்ட்] 3364, வீரராகவன் [சுயேச்சை] 807. இத்தேர்தலில் நேரடிப்போட்டி ஏற்பட்டுள்ளதால் காங்கிரஸாரும், எதிர்ப்பு அணியினருப் முழுப்பலத்துடன் வேலை செய்கின்றனர்,

### திருச்சி மாவட்டம்

திருச்சி மாவட்டத்தில் உள்ள எல்லாத் தொகுதிகளிலும், கடுமையானபோட்டிநிலவுகிறதுஇம்மாவட்டத்திலுள்ள திருமயம் தொகுதியில் மந்திரி ராமையாவை எதிர்த்து தி. மு. கவை சேர்ந்த புலவர் பொன்னம்பலம் போட்டியிடுகிறார். இவர்களுக்கிடையே போட்டி கடுமையாக இருக்கிறது. கடந்த தேர்தலில் மந்திரி ராமையா 10,000 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றார். இத்தடவை எதிர்க்கட்சிகள் ஒன்றுசேர்ந்திருப்பதால், போட்டி பலமாக இருக்கிறது. 62-ம் ஆண்டு போட்டி நிலபரப்: மந்திரி ராமையா [காங்கிரஸ்] 28,219, பாலகிருஷ்ணன்[தி. மு. க.] 17.916 சீனிவாசன் [சுதந்திரா] 16,915, எஸ். முத்து [சுயேச்சை] 1703 கடந்த தேர்தலில் மந்திரி ராமையாவிற்கு எதிராக [illegible] வோட்டுகள் கிடைத்தது. இவ் வோட்டுகள் இம்முறை தி. மு. க. வேட்பாளருக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### கட்சிகள் பலம்

150 இடங்களில் காங்கிரஸ் வெற்றிபெறும் என்று மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். 160 இடங்களில் எதிர்ப்பு அணியினர் வெற்றி பெறுவர் என தி. மு. க. தலைவர் மதியழகன் கூறியுள்ளார். ஒவ்வொரு கட்சியினரும் தங்கள் பலத்தில் நம்பிக்கை வைத்திருப்பது இயற்கையே. கட்சியிலுள்ள பற்றுத்தான் அதற்குக் காரணம். தமிழ்நாடு எங்கும் சுற்றுப்பிரயாணம் செய்துள்ள காமராஜர் எல்லா இடங்களிலும் நல்ல ஆதரவு இருப்பதாகவும், காங்கிரஸ் மீண்டும் கூடிய ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றும் என்றும் கூறியுள்ளார். அதேசமயம், திருச்சி, மதுரை, வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோவை, செங்கல் பட்டு மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்த தி. மு. க. தலைவர் என். வி. நடராஜன் தமிழ்நாட்டில் எதிர்ப்பு அணி வெற்றி பெறும் வாய்ப்பு உள்ளது என்றும், கிராமப்புறங்களில் எதிர்ப்பு அணிக்கு நல்ல ஆதரவு உண்டென்றும் கூறியுள்ளார். ஆதலால் ஒவ்வொருவரும் தங்கள் கட்சிவெற்றியில் நம்பிக்கைவைத்துள்ளனர் என்பது தெளிவு.

### நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று

சென்னை நகரசபைத்தேர்தல் நடக்கும் சமயம், காங்கிரஸ் தலைவர் காமராஜர் டில்லி சென்றிருந்தார். விமான நிலையத்தில் நிருபர்கள், அவரை சென்னை நகரசபை நிலபரம்பற்றிக் கேட்டபோது, சென்னை நகரசபையை காங்கிரஸ் நிச்சயம் கைப்பற்றுமென்று கூறினர். ஆனல் நகரசபைத் தேர்தலில் தி. மு. க வினர் வெற்றிபெற்றனர். கடந்த தேர்தலில், காஞ்சிபுரத்தில் போட்டியிட்டஅண்ணுதுரை சென்னையில் தி. மு. க.வேட்பாளருக்கு பிரசாரம் செய்ய வந்தபோது, காஞ்சியைப் பற்றி எனக்குக்கவலலை, நிச்சயம் வெற்றிபெறுவேன் என்றார். கடைசியில் நடந்ததென்ன? அண்ணுதுரை 10, 000 வாக்குகளால் தோல்வியடைந்தார். ஆதலால், கொடிகளையும், கூட்டங்களையும், ஊர்வலங்களையும் பார்த்து, வெற்றி தோல்வி சொல்லிவிட முடியாது. நாட்டில் உள்ள நிலபரம், ஆட்சிக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு, மக்களின் மனேநிலை, எதிர்க்கட்சிகளின் வளர்ச்சி, அரசாங்கத்தின் சாதனைகளை வைத்தே வெற்றிதோல்விகளை ஊகிக்கமுடியும்.

### அரசாங்கம்மீது அதிருப்தி

காங்கிரஸ் அரசாங்கத்தின் ஐந்தாண்டுத் திட்டங்கள் வெற்றியளித்துள்ளதா? மக்கள் பயனடைந்துள்ளனரா? ஐந்தாண்டுத்திட்டங்களில் அநியாயமாகப் பணத்தை செலவுசெய்ததாக எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர். அடுத்த ஐந்தாண்டுத்திட்டத்தை, வெளிநாட்டு உதவி விபரத்தை அறிந்தபின்பே தயாரிக்க வேண்டுமென பிரதமர் இந்திரா கூறியுள்ளார். ஆதலால் இத்தேர்தலில் மக்கள் அடுத்தஐந்தாண்டுத் திட்ட விபரங்களை அறிய வாய்ப்பில்லாமல் போய்விட்டது. நாட்டில் பசி, பஞ்சம், பட்டினி அதிகரித்துள்ளது. வெளிப்படையாக இதனல் மக்கள் அரசாங்கத்தின்மீது அதிருப்தி அடைந்துள்ளனர் என்பது உண்மையே. கூப்பனுக்குக்கூட அரிசி கிடைக்க முடியாத நிலைமை தமிழ் நாட்டில் உள்ளது. அதே வேளையில் தனிப்பட்டவர்களிடம் 1படி 3 ரூபாவாகக் கிடைக்கிறது. இதனுலும் மக்கள் அதிருப்தி அதிகரித்திருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரைஇந்தி எதிர்ப்பினல் அரசாங்கத்தின்மீது மக்கள் ஆத்திரமடைந்துள்ளனர்.

இந்திஎதிர்ப்புப் போராட்டத்தில், 150 பேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதை குறிப்பாக மாணவர் உலகம் மறக்கத் தயாராக இல்லை. சென்றமாதம் 25ந்தேதிகூட இந்தி எதிர்ப்பில் மரணமானவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மாணவர்கள் எவரும் கல்லூரிக்கு செல்லவில்லை. இந்தச் சம்பவங்களும் பெற்றோர் மனதில் பதிந்துள்ளது. அரசாங்கம் மாறவேண்டுமென்ற எண்ணம் மக்களிடையே அதிகரித்துள்ளது. 20 ஆண்டு காலம் காங்கிரஸ் ஆட்சி அலுத்துவிட்டது. எதிர்க்கட்சியினர் என்ன செய்வார்கள் என்பதை அறிய மக்கள் விரும்புகின்றனர். இதனல்இந்தியாமுழுவதும் எதிர்க்கட்சியினர் ஒன்று சேர்ந்து பணியாற்றுகின்றனர். ஆதலால் இத்தேர்தல் காங்கிரஸிற்கும் எதிர்க்கட்சியினருக்கும்நேரடிப்போட்டி. கடுமையான போட்டி.

---

### கூலிபோதா . . .

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

ரூபாய்வரையான பெறுமதியுள்ளநகைகளை போட்டிருந்தேன். இந்தநகைகளை நாம்விறகுவிற்ற பணத்திலிருந்தும் 2-ம் எதிரியின் உழைப்பிலிருந்தும் வாங்கினேம். நாங்களிருவரும் கட்டிய சீட்டிலிருந்து எனக்கொரு தாலிக்கொடி வாங்கப்பட்டது. காணிவாங்குவதற்குச் செலவிடப்பட்ட மிகுதிப்பணமும் வீடுகட்டுவதற்குச் செலவிடப்பட்ட பணமும் அவரின்[2-ம்எதிரி] உழைப்பிலிருந்த பெறப்பட்டது. நாங்கள் விவாகஞ் செய்த 3-வது வருடத்தில் காணியை வாங்கினேம். 6 வருடத்துக்கு முன்னரே வீடு கட்டிமுடிக்கப்பட்டது.

இக்கட்டத்தில் நீதிபதி நேரம்போதாமையால் விசாரணையை இம்மாதம் 25-ம் திகதிக்கு ஒத்திவைத்து அத்திகதிவரை எதிரிகளை றிமாண்டில் வைக்கும்படியும் சரோஜினி தேவியை அடுத்ததவணை கோர்ட்டில் ஆஜராகும்படி 'சம்மன்ஸ்' அனுப்பவும் உத்தரவிட்டார்.

---

### கிராமசபைத் தேர்தல்

கோப்பாய், திங்கள்

ஏப்ரல் மாதத்தில் நடைபெறவிருக்கும் கோப்பாய் கிராமசபைத் தேர்தலுக்கான அபேட்சகர்களின் நியமனப் பத்திரங்கள் 28-ம் திகதி காலை கிராமசபைக் கந்தோரில் யாழ்ப்பாண மாவட்ட உதவித்தேர்தல் உத்தியோகத்தர் தலைமையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கூலி போதாதென்று கணவன் தலையில ஒளித்து நின்று அடித்த மந்திரவாதி மீண்டும் உறவானதும் புதையல் எடுப்பதாகக்கூறி ஏமாற்றினர்"

## "கார்த்திகைக்காய்" முக்கொலை வழக்கில் மாண்ட குழந்தைகளின் தாய் சாட்சியம்

மாவிட்டபுரம், செவ்.

"முதலாம் எதிரி ஒரு மந்திரவாதி. அவர் எனது கணவனின் ஒன்று விட்ட தம்பியுமாவார். சுமார் 10 வருடங்களுக்கு முன் அவர் எங்களுடைய புதுவீட்டில் தச்சுவேலை செய்வதற்காக வந்தார். அப்பொழுதுதான் அவரை எனக்கு முதன் முறையாகத்தெரியும். அவர் தச்சுவேலை செய்ததற்குரிய கூலிகாணுதென்று ஒருநாள் ஒளித்திருந்து எனது கணவரின் தலையில் அலவாங்கால் அடித்துவிட்டார். இதனுல் எனது கணவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ருர். அதன் பின்னர் இருவரும் கதைப்பதில்லை. ஐந்துவருடங்களுக்கு முன்னர் முதலாம் எதிரியின் தகப்பனுர் இறந்தபொழுதுதான் மீண்டும் இருவரும் ஒற்றுமையானுர்கள்."

வட்டுக்கோட்டை 'கார்த்திகைக்காய்' முக்கொலை வழக்கு நேற்றுமாலை மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ், நித்சிங்கா முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தொடர்து சாட்சியமளித்த காலஞ்சென்ற பிள்ளைகளின் தாயரான விசாலாட்சி மேற்கண்டவாறு கூறினுர்.

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்தவர்களான சரஸ்பதி தியாகராசா [மந்திரவாதி] இராமசாமி காசிப்பிள்ளை [பிள்ளைகளின் தந்தை] ஆகிய இருவரும் சென்றவருடம் நவம்பர் மாதம் 28-ம் திகதி காசிப்பிள்ளையின் பிள்ளைகளான பாக்கியலட்சுமி [5], இராசேந்திரம் [8] வைரவநாதன் [3[ ஆகிய மூவரையும் நஞ்சூட்டிக்கொலை செய்ததாகவும் அதேநேரத்தில் காசிப்பிள்ளையின் மனைவி விசாலாட்சி மகள்சரோஜினி தேவி ஆகிய இருவரையும் நஞ்சூட்டிக் கொலைசெய்ய முயன்றதாகவும் சங்கானைப் பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானுர். சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஸி. டி. மெண்டிஸ்வழக்கை நடத்தினுர். வழக்கு இன்று தொடர்ந்து எடுத்துக்கொள்ளப்பட்டபோது இன்ஸ்பெக்டர் நீதிபதியிடம், தான் மந்திரவாதி இரண்டாவது எதிரிக்கு எழுதியதாகக் கூறப்படும் கடிதத்தைக் கோர்ட்டில் இன்று சமர்ப்பிக்கவில்லை என்றும் அதை தனதுசாட்சியத்தின் போது சமர்ப்பிப்பதாகவும் கூறினுர்.

இதனைத்தொடர்ந்து சாட்சியை எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் செல்வரத்தினம் குறுக்குவிசாரணை செய்தார். சாட்சி குறுக்கு விசாரணையில் கூறியதாவது:

"நான் இரண்டாவது எதிரியை 16 வருடங்களுக்கு முன் விவாகம் செய்தேன். எனது சொந்த ஊர் காரைநகர். கணவனின் சொந்த ஊர் வட்டுக்கோட்டை நான் கல்யாணத்தின்பின் வட்டுக்கோட்டையிலுள்ள அவரின் பெற்ருேரின் வீட்டில்தான் வசித்து வந்தேன். சிறிது காலத்தின் பின்சுமார் 10 ஆயிரம்ரூபாய்க்கு இரண்டாம் எதிரி ஒரு காணி வாங்கினுர். இக்காணியை வாங்குவதற்கு எனது சீதனப் பணமாகிய ஆயிரம் ரூபாவும் எனது நகைககள் விற்று வந்த பணமும் எனது தகப்பனுரிடமிருந்து கடனுகப் பெற்ற 500 ரூபாவும், எனது கணவனின் தம்பியிடமிருந்து பெறப்பட்ட 500 ரூபாவும் செலவிடப்பட்டது. மிகுதிப்பணத்தை எனது கணவன் வேறு பலரிடமிருந்து கடனுகப்பெற்ருர். இந்தக்காணியில் சுமார் இருபதினுயிரம் ரூபாய் செலவில் ஒரு வீடு கட்டப்பட்டது. அவ் வீடு ஐந்து வருடங்களுக்கு முன்னர் தான் கட்டி முடிக்கப்பட்டது.

### ஒளிந்து நின்று அடித்தார்

முதலாம் எதிரி எனது கணவனின் ஒன்றுவிட்ட தம்பி. நாங்கள் புது வீடு கட்டும்பொழுது அவர் தச்சுவேலை செய்வதற்காக வந்தார். அவருடைய வீடு எங்கள் வீட்டிற்கு வெகு அண்மையில் இருந்தும் அன்றுதான் அவரை எனக்கு முதன்முறையாகத் தெரியும். முதலாம் எதிரியின் உண்மையான தொழில் மந்திரவேலை. முதலாம் எதிரி ஒருநாள் தனது வேலைக்குரிய சம்பளப் பணம் போதாதென்று கூறி ஒட்டி நின்று அலவாங்கால் அவரின் தலையில் அடித்துவிட்டார். பிறகு வழக்கும் நடைபெற்றது. அதன் பின்னர் முதலாம் எதிரி எங்கள் வீட்டிற்கு வருவதில்லை. முதலாம் எதிரி விவாகம் செய்துவிட்டார். அவரின் மனைவியும் எங்கள் வீட்டிற்கு வருவதில்லை. நாங்களும் அங்கு போவதில்லை. சம்பவத்திற்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர் முதலாம் எதிரியின் தகப்பனுர் இறந்துவிட்டார். அந்த மரண வீட்டிற்கு எனது கணவன் சென்ருர். நான் செல்லவில்லை. அன்று தொடக்கம் எதிரிகள் இருவரும் சினேகமானுர்கள். நானும் எனது கணவனும் எனது பெற்ருேரின் வீட்டிற்கு மாதம் ஒரு தடவை செல்வது வழக்கம். அவர்களும் எங்கள் வீட்டிற்கு வருவார்கள். நான் எனது சுகத்துக்கங்களில் அரைவாசியை எனது பெற்ருேருக்குக் கூறுவேன். அரைவாசியைக் கூறுவதில்லை. ஏனென்ருல் அவர்கள் என்னை நினைத்துத் துன்பப்படுவார்கள். எங்களுக்கு 500 ரூபா பணம் வேண்டியிருந்தால் நானும் எனது கணவனும் எனது பெற்ருேரிடம் சென்று 250 ரூபா தரும்படி கேட்போம். மிகுதிப்பணத்தை வேறு யாரிடமிருந்தாவது மாறுவோம். இரண்டாம் எதிரி முதலாம் எதிரியுடன் சேராமல் இருந்திருந்தால் அவர் ஒரு நாளைக்கு 10 ரூபாவுக்கு மேல் உழைப்பார்.

### மருந்துகளை வீசி விடுவேன்

1-ம் எதிரி எனது பிள்ளைகளின் வருத்தத்திற்குப் பல தடவை மருந்துகள் தந்திருக்கிருர் அவர் முதல் தடவையாக ஒரு ஹோர்லிக்ஸ் போத்தலில் மருந்து தந்தார். அம்மருந்து நெய்போலிருந்தது. அம் மருந்தைப் பிள்ளைக்குக் கொடுத்தபோது வாயாலும் வயிற்ருலும் போய் நோய் முற்றியது. அதன் பிறகு மந்திரவாதி தருகிற மருந்தை நான் பிள்ளைகளுக்குக் கொடுக்காமல் வெளியில் வீசிவந்தேன். நான் மருந்துகளை வெளியில் வீசுவதுபற்றி எதிரிகளுக்குத் தெரியாது. தெரிந்தால் எனக்கு அடித்துவிடுவார்கள். நான் மந்திரவாதி தருகிற மருந்தை வெளியில் வீசிவிட்டுப்பிள்ளைகளை வேலாயுத வைத்தியரிடம் கூட்டிச்சென்று மருந்து வாங்கிக் கொடுப்பேன். அச்சமயம் அப்பொழுது 2-ம் எதிரி ஏன் மந்திரவாதியினுடைய மருந்தை விட்டு விட்டு வேலாயுத வைத்தியரிடம் கூட்டிக் கொண்டு போகிருய் என்று கேட்பார். நான் அழுதழுது மந்திரவாதியின் மருந்துக்கு நோய் கூடுவதாகக் கூறி பிள்ளைகளை 'வலாயுதப் பரிகாரியிடம் கூட்டிச்செல்வேன். மந்திரவாதியின் தகப்பனுர் ஒரு வைத்தியர் என்ருே அல்லது மந்திரவாதி வேறு யாருக்கேனும் வைத்தியம்செய்கிருர் என்ருே எனக்குத் தெரியாது.

### ஓலைப் பையில் கார்த்திகைக் காய்கள்

எதிரிகள் கார்த்திகைக் காய் கொண்டுவந்த தினம் எனக்கு ஞாபகம் இருக்கிறது. அன்று இரு எதிரிகளும் ஓர் ஓலைப்பையில் கார்த்திகைக காய்களைக் கொண்டு வந்தார்கள். அப்பையில் சுமார் 45 காய்கள் வரையிருந்தன. அவற்றில் அரைவாசியைப் பிள்ளைகளுக்குச் சமைத்துக் கொடுக்கும்படி 1-ம் எதிரி என்னிடம் கூறினுர். நான் அன்றுதான் முதன்முதலாக அக்காய்களைப் பார்த்தேன். அக்காய்கள் நஞ்சா அல்லது சாப்பிடக் கூடியவையா என்று எனக்குத் தெரியாது. அன்று அக்காயைச் சமைக்கச் சொன்னபோது எனக்கு சந்தேகம் வந்தபடியால்தான் நான் சமைக்க மறுத்தேன். அது நஞ்சுக்காயாக இருக்கும் எனச் சந்தேகபட்டதால் 1-ம் எதிரியிடம் சமைத்துக் கொடுக்க முடியாதெனக் கூறினேன். அதற்கு 1-ம் எதிரி "இருபார்ப்போம்" எனக் கூறி 2-ம் எதிரியையும் கூட்டிக் கொண்டு சென்றுவிட்டார். அப்படிச் சென்றவர்கள் 3 நாட்களின்பின் திரும்பி வந்து "சமைத்துக் கொடுத்தனீரா?" என்று என்னைக் கேட்டனர். நான் 'இல்லை' என்றேன். அவர்கள் பூசை [illegible] செய்தனர். பின்னர் மந்திரவாதி மட்டும் தனியாகச் சென்ருர். பகல் முழுவதும் வீட்டிலிருந்த 2-ம் எதிரி 1-ம் எதிரியைத் தேடிச் சென்றுவிட்டார். அவர்கள் கொண்டுவந்த கார்த்திகைக் காய்கள் ஓலைப்பையுடன் குசினிக்குப் பக்கத்திலுள்ள பெரிய அறையில் ஆயுதப் பெட்டிக்கு மேல் இருந்தது. நான் நினைத்திருந்தால் அக்காய்களை அவர்கள் இல்லாத நேரம் பார்த்து எடுத்து எறிந்திருக்க முடியும். ஆனுல்எனதுமனம் மனம் அப்படிச் செய்யவிடவில்லை. அத்துடன் அவர்கள் அக்காய்கள் பவுத்திரமாயிருக்க வேண்டுமென்றும், அவற்றை எடுத்து எறியக் கூடாதென்றும், அவற்றைப் பிள்ளைகளுக்கு கட்டாயமாகச் சமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும் கட்டாயப்படுத்தினுர்கள்.

### காய்களைப் பொரித்துச் சமைத்தேன்

கார்த்திகைக் காய்கள் கொண்டுவந்த 5-ம் நாள் மீண்டும் திரும்பி வந்த எதிரிகள் "கார்த்திகைக்காய் கறி சமைத்துக் கொடுத்ததா?" என்று கேட்டனர். நான் இல்லையென்று கூறவே இன்று எப்படியாவது சமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கூறி என்னைப் பலவந்தமாகச் சமைக்கச் செய்தனர்.

நான் சுமார் இருபது கார்த்திகைக் காய்களை எடுத்து அவற்றை ஒவ்வொன்றும் முதலில் 4 பெரிய துண்டுகளாக வெட்டியும் பின்னர் அவற்றைச் சிறு சிறு துண்டுகளாக்கியும் பொரித்தேன். பின்னர் அவற்றைத் தேங்காய்ப்பால், மிளகாய்த்தூள், உப்பு ஆகியவை போட்டுப் பக்குவமாகக் கறி சமைத்தேன். பின்னர் அவற்றைச் சோற்றுடன் குழந்தைக்குக் கொடுத்தேன். மிகுதிக்காய் ஆயுதப் பெட்டிக்கு மேல் ஓலைப்பையுடன் இருந்தது.

அன்று மாலை 2-ம் எதிரி, என்னைக் காரைநகரிலுள்ள எனது பெற்ருேர் வீட்டுக்குச் சென்று கடனுகப் பெற்ருேரிடம் பணம்வாங்கி வரும்படியும், அப்பணம் புதையல் எடுப்பதற்குத் தேவையென்றும் கூறினுர். நான் எனது கடைசிப்பிள்ளையுடன் காரைநகருக்குச் சென்றேன். அன்றிரவுஎனக்கும் எனது பிள்ளைகளுக்கும் வாயாலும் வயிற்ருலும் போகத் தொடங்கிவிட்டது. அடுத்த நாட் காலை நான் வீட்டுக்குச் சென்றேன். அன்றிரவு வீட்டிலிருந்த எனது மற்றப் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாது. நான் வீட்டுக்கு வந்தபோது பிள்ளைகள் அறிவிழந்து கிடந்தார்கள்.

பிள்ளைகளை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றேன.

### புதையல் எடுக்க செலவிட்டபணம்

கார்த்திகைக்காய் சமைத்த அன்றிரவு நானும் பிள்ளைகளும் வீட்டிலிருந்ததாகவும் பிள்ளைகளுக்கும் எனக்கும் ஒரே நேரத்தில் வயிற்ருலையும் வாயாலையும் போனதாகவும் எனதுமகள் சரோஜினிதேவி பொலிசாருக்குக்கூறியிருந்தாள். அது சரியல்ல. நான்பொலிசாருக்குக்கொடுத்த வாக்குமூலத்தில் கடந்த 5 வருடங்களாக 1-ம்எதிரி 2-ம் எதிரிக்கு புதையல்எடுத்துத்தருவதாகக் கூறி ஏமாற்றிவருவதாகக்கூறியுள்ளேன். 2:ம் எதிரி அதற்காகக்காணியை ஈடுவைத்தும், நகைகளை விற்றும் செலவழித்துள்ளார்என்றும் கூறியுள்ளேன். காணி வாங்கியபின் நான் 3000 தொடக்கம் 5000

[6ம் பக்கம் பார்க்க]

கிரிக்கெட் போட்டி

## மத்திய கல்லூரியிடம் சில்வேஸ்டர் தோல்வி

### லியூக், சத்தியதேவாவின் சிறப்பான பந்துவீச்சு

யாழ்ப்பாணம், செவ்,

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் கண்டி செனு். சில்வஸ்டர் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி175 ஓட்டங்களால் சென். சில்வஸ்டர் கல்லூரியைத் தோற்கடித்தது.

இப்போட்டி இருநாட்களாக யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில்சென் சில்வஸ்டர் கல்லூரியைச் சேர்ந்த பந்தெறி வீரர் லியூக், மத்திய கல்லூரியின் பந்தெறிவீரர் சத்திள தேவா ஆகியோரின் விளையாட்டுப்பாராட்டத்தக்கது.

முதலில் துடுப்பெடுதாத்டிய மத்தியகல்லூரி சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 144 ஓட்டங்களைப் பெற்றது, இதில்கங்காதரன் 35 ஓட்டங்களும், நரேந்திரன் 48 ஓட்டங்களும், சாந்தீகரன் 12 ஓட்டங்களும், பாலேந்திரா 10 ஓட்டஙகளும், புரட்சிதாசன் 12 ஓட்டங்களும், சத்[illegible] 26 ஓட்டங்களும் முறையே பெற்றனர். இ சந்தர்ப்பத்தில் சென், சில்வஸ்டர் கல்லூரியின்பந்தெறி வீரர்களான கியூ. மத்தா 12 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கட்டையும், என். லீயூக் 36 ஓட்டங்கள் நஷ்டத்தித்கு 6 விக்கட்டுகளையும், எம். பென்கர் 45 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3 விக்கட்டுகளையும் வீழ்த்தினர். முதல் இனிங்சில் சென். சில்வஸ்டர் கல்லூரி துடுப்பெடுத்தாடி சகல விக்கட்டுகளையும் இழந்து 76 ஓட்டங்களே பெற்றது. இதில் ரி. பவுதின் 11 ஓட்டங்களும், எம். பெரேரா 21 ஓட்டங்களும், கியூ. மத்தா 13 ஓட்டங்களும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில்மத்திய கல்லூரியின் பந்தெறி வீரர் சத்தியதேவா 32ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 5விக்கட்டுகளை வீழ்த்தினுர்.

2ம் இனிங்ஸில்மத்தியகல்லூரி சகல விக்கட்டுகளையும் இழந்து 180ஓட்டங்களைப் பெற்றது.

இதில் யோகேஸ்வரன் ஆட்டமிழக்காமல் 29 ஓட்டங்களைப் பெற்ருர். 2-ம் இனிங்சில் சென். சில்வஸ்டர் கல்லூரி துடுப்பெடுத்தாடி 180 ஓட்டங்களைப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைக்கோட்டையில்

# துப்பாக்கிச் சூட்டுக்கு ஒருவர் பலி

## சந்தேகநபர் தலைமறைவு

யாழ்ப்பாணம், செவ் ஆனைக்கோட்டையில் நேற்று முன்தினம் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் சூடுதுப்பாக்கிச் நடந்த ஸ்தலத்திலேயே மரணமானுர்.

துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானவர். ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவரான எஸ். சோமசுந்தரம் என்பவரென பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ள. கைகைகலப்பொன்றை தொடர்ந்து துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

சந்தேகநபரான கணபதிப்பிள்ளை அமிர்தலிங்கத்தை பொலிஸார் தேடுகின்றனர். அவர் தலைமறைவாக விருப்பதாக அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் துப்பாக்கிச் சூடு நடந்த இடத்துக்கேசென்று ஸ்தல விசாரணை நடத்தினுர். யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம்காலஞ் சென்றவரை பிரேத பரிசோதனை நடத்தினுர்.

ஆனைக்கோட்டைபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் திரு. டயஸ் மேலும் புலன்விசாரணைசெய்கின்ருர். [ந. நி[

சுழிபுரம், திங்கள்

இம்மாதம் 27ம்திகதி வட்டுக்கோட்டை கிராமசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல்செய்யப்படவிருக்கிறது. யாழ்ப்பாணம் தேர்தல் உதவி அதிகாரி திரு. வீ. முருகேசு நியமனப்பத்திரத்தை ஏற்றுக் கொள்வார். எல்லாவட்டாரங்களிலும்பலத்த போட்டி இருக்குமென எதிர்பார்க்கப் படுகின்றது.

### சுவையான தேர்தல் செய்திகள்

○ பரித்கோட் அருகில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் அகாலி தளத் தலைவர் சந்த் பத்தேசிங் பேசிக் கொண்டிருக்கும்போது மயங்கி விழுந்தார். 3 மணி நேரம் அவர் மயக்கமாகக் கிடந்தாராம்.

○ கட்சி மீதுள்ள பற்றினுல் பலர் ரூபா நோட்டுகளில்தேர்தல் சின்னங்களைப் பொறித்துப் பிரசாரம் செய்தனர். சின்னங்கள் பொறித்த நோட்டுக்கள் செல்லாதென பொலிஸ்கமிஷனர் அறிவித்துள்ளார். இதனுல் பலர் செய்வதறியாது விழிக்கின்றனர்.

○ குவாலியார் மகாராணி டெல்லி பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிட, நட்சத்திரத்தையும் சட்டசபை [illegible]ாகுதியில் போட்டிய[illegible]ந்தையும் சின்னமாகப[illegible]ற்றுள்ளார். ஒரே அபேட்சகருக்கு இரு சின்னங்கள்.

‘தென்கிழக்கு

# ஆசிய நாடுகளின் எதிர்காலத்துக்கு வழி’

புதுடில்லி, பெப். 13 தென்கிழக்காசிய நாடுகளிடையே வலுவான ஐக்கியம்ஏற்படுவதற்கு சம்பந்தப்பட்ட நாடுகளெல்லாம் நம்பிக்கையுடனும் நல்லெண்ணத்துடனும் உழைக்கவேண்டுமென்றும்அவ்விதம் உழைத்தால்தான்இந்த நாடுகளின் எதிர்காலம்நல்லதாக இருக்குமென்றும் இலங்கை ஹைகமிஷனர் திரு. ஏச். எஸ். அமரசிங்கா கூறினுர்.

இங்கு இந்திய—இலங்கை நட்புறவுச்சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப்பேசுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தியாவைப்போன்று இலங்கையும் மண்டல சார்பற்ற கொள்கையையே வெளிநாட்டுக் கொள்கையாகக் கடைப்பிடித்து வருவதாகவும் ஜனநாயக சோஷலிசக் கொள்கையில் நம்பிக்கைகொண்டு உழைத்துவருவதாகவும் அவர் மேலும் பேசுகையில் கூறினுர்.

இந்தியாவைப்போன்று இலங்கையின் அயல்நாடும் நட்புறவு நாடுமான இன்னெரு நாட்டுக்கும் இந்தியாவுக்குமிடையில் சச்சரவு இருந்து கொண்டிருப்பது தமது நாடான இலங்கைக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

WANTED

An Accounts Clerk with a knowledge of Book-keeping and not less than 5 years experience. Salary According to qualifications. Apply in writing before 20-2-67 to Advt. No 2439, c/o ela nadu, Jaffna 2439

# பனி காலமும், கிரந்தித் தொய்வும், முட்டு இருமலும்

காலஞ் சென்ற திரு. கந்தப்பிள்ளை சிற்றம்பலம் சண்முகரெத்தினம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட

# யமுனு மருந்துப் பாகத் தொழிலகம்

(Jamuna Pharmaceutical Industries)

யாழ்ப்பாணத்தில் மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களில் பனியின் உபத்திரவத்தினுல்

பாலர்களுக்கும் சிறுபிள்ளைகளுக்கும்
கிரந்தித் தொய்வு, முட்டு ஏற்படுகின்றது

பெரியோர்களுக்கும் தொய்வு, சுவாச முட்டு, சுழை, இழுப்பு

முதலியன இப்பனிக்குளிர் காலத்தில் தலைகாண்பிக்கும். இவ்வியாதி பரம்பரைக் காரணமாகவும் சில உணவுகள் ஏற்றுக்கொள்ளாமையாலும் அயல் அண்டையினின்று எழும் காற்ருலும் ஏற்படுகின்றன.

முனிவர்கள் இதை அறிந்து அவற்றிற்கேற்ப மருந்துகளைத் தந்து இருக்கின்றனர். பிரதானமாய் பாலர்களுக்கும், சிறுபிள்ளைகளுக்கும்

‘கிரந்தித் தொய்வு, ஏனுதி’யையும் ‘வெற்றிலைச் சாற்றுக் கோரோசனை’ மாத்திரைகளையும் தந்திருக்கின்றனர்.

இந்நோய் காரணமாக மலபந்தத்தினுல் வருந்துவோருக்கும்

‘திரிகுண தைலமும்’ பெரியோர்களின் தொய்வு இருமலுக்கு ‘கஸ்தூரி மிருத்தியாதி’ முதலியவற்றையும் தந்திருக்கின்ருர்கள்.

மேற்படி மருந்துகளை அநேக ஆண்டுகளாகப் பாவித்து திருப்தி கண்டபடியால் பொதுமக்கள் அறிதற் பொருட்டு இவற்றை முதன் முதலாக பிரசுரம் பண்ணுகிரேம்.

1 கிரந்தித் தொய்வு ஏனுதி 15 மாத்திரைகள் 5 நாட்களுக்கு தினம் 3 வேளை கொடுக்க. விலை ரூபா 4-50 ஆகும்

2 மலபந்தம் உள்ளவர்களுக்கு ‘திரிகுண தைலம்’ 2 அவுன்ஸ பிரமாணம் 1 தேக்கரண்டி தினம் ஒரு வேளை கொடுத்துவரவும். விலை ரூபா 4-00 ஆகும்.

பெரியவர்களுக்கு தொய்வு, முட்டு இழுப்புக்கு 5 நாட்களுக்கு வேண்டிய 10 சரை தூள் 5 ரூபா, 8 நாட்கள் குடிக்கும் அரிஷ்ட்டத்திற்கு நான்கு ரூபா.

கவனிப்பு: மேற்படி மருந்துகளின் விலை முன் சாபம். ஆனுல் இப்போது 180 இறையின் கொண்ட ஒரு தோலா கோரோசனை விலை 12-00 ரூபாவிலிருந்து 65-00 ரூபாய்க்கு ஏறியுள்ளது. கஸ்தூரியும் ஒரு தோலா 26 ரூபாவிலிருந்து 180 — 200 ரூபாவரை ஏறிவிட்டது. ஆகவே இச்சரக்குகள் சேரும் மருந்துகளின் விலையும் அதிகரித்துக்கொண்டது பற்றி விசனிக்கிறேம்,

பதிவு செய்யப்பெற்ற ஆயுள்வேத வைத்தியர்கள் தொகையாக யமுனு மருந்துப் பாகத் தொழிலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றையோரும் மேற்படி மருந்துகளை கீழ்க்காணும் ஸ்தாபனங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

இவற்றை மேற்படியமுனு மருந்துப்பாகத்தொழிலகம் இருவைத்திய ஸ்தாபனங்களிலும் எந்நேரமும் எந்நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

1. ஆயுள்வேத மருத்துவசாலை
55, சிவன் கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

2. ஆயுள்வேத மருத்துவசாலை
69, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலை பேசி இல. யாழ்ப்பாணம் 546

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை “ஈழநாடு” லிமிடெட் [illegible] வீதி, 6?-ம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் 1967-ம் ஆண்டு பெப்ரவரி 15-ந் திகதி [illegible] பிரசுரிக்கப்பட்டது.